# அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்

தனிப் பிரதி ரூ. 10/–
ஆண்டுச் சந்தா ரூ. 100/–
ஆயுள் சந்தா ரூ. 1000/–

மலர் : 11 / இதழ் : 4 / பிப்ரவரி – 2015



"வலதுகைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம்பேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருகஜீவன்களும் இருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ...."

யோனா 4 : 11

ஆசிரியர். பேராயர். வே. தேவதாஸ்



## 23.2.2015 அன்று பிறந்த நாள் காணும் பேராயர் தேவதாஸ் அவர்களை வாழ்த்துகிறோம்....

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

23.02.2015 அன்று 55வது பிறந்த நாளை காணும் நம் அன்பான **பேராயர் வே. தேவதாஸ்** அவர்களை அன்போடு வாழ்த்துகிறோம். இதுவரை நடத்திவந்த தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம், நம் பேராயர் அவர்களுக்கு தேவன் நல்ல சுகத்தையும், பெலத்தையும் தந்து ஊழியத்தில் வல்லமையாக பயன்படுத்துவாராக. அவர்களையும் அவர்கள் சந்ததியையும் கர்த்தர் பெருகப்பண்ணி, தேவன் அவர்களுக்குக் கொடுத்த தரிசனத்தையும் நிறைவேற்றுவாராக.

*Shalom Pastors & Bhil Evangelists*
*Sharing Love Mission, Shalom Charity Mission &*
*Shalom Diocese in India.*

**"நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே உன்னை அறிந்தேன்;**
**நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி,**
**உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன்......." எரே. (1:5-)**

## ஷாலோம் தலைமை & கிளை அலுவலக ஊழியர்களின் குடும்ப ஆசீர்வாதக் கூடுகை

கடந்த 2.1.2015 அன்று காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை தூத்துக்குடி பெல் ஹோட்டலில் வைத்து, நமது ஷாலோம் தலைமை அலுவலக மற்றும் கிளை அலுவலக ஊழியர்களுக்கான புத்தாண்டு குடும்ப ஆசீர்வாதக் கூடுகை நடைபெற்றது. இதில் ஊழியர்கள் குடும்பத்துடன் கலந்துக் கொண்டார்கள். இக்கூட்டத்தில் பாடல் ஆராதனை முடிந்ததும் சகோதரி, Dr. வஹிதா தேவதாஸ் அவர்கள் பணித்தளத்தில் 2014 ஆம் ஆண்டு நடைபெற்றப் பணித்தள ஊழியங்களைக்குறித்து விளக்கிக் கூறினார்கள். மேலும் ஊழிய தரிசனத் திட்டங்களை நிறைவேற்ற அர்ப்பணிப்பு ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, நம் பிஷப். V. தேவதாஸ் அவர்கள் எபிரெயர் : 6 : 14 ஆம் வசனத்தின் அடிப்படையில் வாக்குத்தத்த செய்தியைப் பகிர்ந்துக் கொண்டது அனைத்து ஊழியர்களுக்கும் மிக ஆசீர்வாதமாக இருந்தது. அனைவருக்கும் அன்பின் விருந்து கொடுக்கப்பட்டது. தேவனுக்கே மகிமை!



## உங்கள் சகோதரனிடமிருந்து



*கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே,*

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்களை குஜராத் பணித்தளத்திலிருந்து தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்த 2015ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் முழுவதும் தேவன் தாமே கூட இருந்து ஊழியங்களை ஆசீர்வதித்தார். உங்கள் யாவரின் ஜெபங்கள் மற்றும் தியாகமான ஆதரவுகளுக்காக தேவனைத் துதித்து நன்றிகளைக் கூறுகிறேன். **தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

23.02.2015 அன்று என்னுடைய வாழ்வில் 55 ஆண்டுகளை பூர்த்தி செய்ய தேவன் கிருபை தந்தபடியால் தேவனைத் துதிக்கிறேன். எனக்கு புது ஜீவன் தந்து, அபிஷேகித்து, ஊழிய அழைப்பையும் தரிசனத்தையும் தந்து இம்மட்டும் எங்களை குடும்பமாக பீல் மக்கள் மத்தியில் அப்போஸ்தலப் பணியைத் தந்து நடத்துகிறபடியால் தேவனைத் துதிக்கிறேன். தேவன் தாமே அடியேனை குயவன் கையில் களிமண்ணாய்; திருக்கரத்தால் தாங்கி என்னைப் பயன்படுத்த எனக்காக என் பிறந்த நாள் அன்று விசேஷமாக ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன்.

20 ஆண்டுகளுக்குப் பின்பு அருப்புக்கோட்டையிலிருந்து என் உடன்பிறந்த மூத்த சகோதரரான **சகோ. V. ஸ்டான்லி ஜோன்ஸ்** அவர்கள் குடும்பமாக, ஜனவரி 9–11 ஆகிய நாட்களில் பணித்தளங்களைப் பார்வையிட்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள். மேலும் பாளையங்கோட்டையிலிருந்து **சகோ. சுகிர்தராஜ்** அவர்களும் ஜனவரி 11–13 ஆகிய நாட்களில் பணித்தளங்களுக்கு வருகை தந்து ஊழியங்களை நிறைவேற்றினார்கள். பணித்தளத்தை பார்வையிட்ட அனைவரையும் தேவன் பீல் மக்களைக் குறித்த ஆத்தும பாரத்தினால் நிரப்பினார். மேலும் அதிகமாய் ஷாலோம் ஊழியங்களைத் தாங்கவும், மற்றவர்களுக்கு ஊழியங்களை அறிமுகப்படுத்தவும் தங்களை அர்ப்பணித்தனர். விபரங்கள் அடுத்தமாத இதழில் வெளியாகும்.

2014ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஊழிய அறிக்கைகளை இந்த இதழில் வெளியிட்டுள்ளேன். மேலும் 2015ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளைக் குறித்து பாரத்துடன் எழுதியுள்ளேன். அவற்றை நிறைவேற்றி முடிக்க தேவன் தாமே எங்களுக்கு கிருபையையும், திராணியையும் தரும்படியாக ஜெபியுங்கள். மேலும் பீல் மக்கள் மத்தியில் நடைபெறும் இந்த உன்னதப் பணியினை ஜெபித்துத் தாங்க முன் வாருங்கள்.


உங்களுக்காகவும், ஊழியங்களைத் தாங்கும் அனைத்து சபைகளுக்காகவும், அனுதினமும் ஜெபித்து வருகின்றேன். **“என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை”** (யோவேல் 2 : 26) என்ற வசனத்தின்படி கர்த்தர்தாமே உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக!

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் **V.** தேவதாஸ்)

என்னுடன் தொடர்பு கொள்ள : 09377445468 (குஜராத்)

# ஆத்துமாக்களுக்காக பரிதபிக்கும் கர்த்தர்



சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

யோனா தீர்க்கதரிசி கர்த்தரால் அழைக்கப்பட்ட தேவனுடைய ஊழியக்காரன். கர்த்தர் அவனை நம்பி நினிவே பட்டணத்தின் ஜனங்களின் இரட்சிப்பிற்காக கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கிக்க அனுப்ப திட்டமிட்டு அழைப்புத்தருகிறார். யோனாவின் ஊழியத்தைக்குறித்து பழைய ஏற்பாட்டில் 4 அதிகாரங்களே எழுதப்பட்டாலும் பிதாவாகிய தேவனுடைய ஆத்தும பாரத்தை வெளிப்படுத்துகிறது. மட்டுமல்ல, தேவ ஜனங்களாகிய நமக்கும் யோனா தீர்க்கதரிசியின் புத்தகம் அநேக காரியங்களைக் கற்றுக் கொடுக்கிறது.

## கர்த்தருடைய சமூகத்தை விட்டு விலகின யோனா

தேவனுடைய அழைப்பையும், தீர்க்கதரிசன அபிஷேகத்தையும் பெற்ற யோனாவை தேவன் நினிவே பட்டணத்தின் ஜனங்களுக்கு கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கிக்க அனுப்ப தீர்மானித்தார். ஏனெனில் தேவன் நினிவே பட்டணத்தில் உள்ள ஜனங்களை அழிப்பதற்கு முன்பாக மனந்திரும்ப வேண்டும் என பாரங்கொண்டார். ஆனால் யோனாவோ தேவனுடைய மனதில் உள்ள பாரத்தை அறிந்து கொள்ளாமல் பிரசங்கிக்க ஆண்டவர் அனுப்புகிறார் என்று நினிவேக்கு போகாதபடி தர்ஷீசுக்கு கப்பல் ஏறுவதைக் காண்கிறோம். ஒருவேளை நினிவே மக்களையும் அங்குள்ள ராஜாவையும் கண்டு இவர்கள் மிகவும் கடின இருதயமுள்ளவர்கள்; நற்செய்தியை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள், எதிர்ப்பு தெரிவிப்பார்கள். என் ஜீவனுக்கு ஏதாவது தீங்கு வரும் என்ற பயமும், திகிலும், இவர்கள் மனந்திரும்ப மாட்டார்கள் என்ற அவிசுவாசமும் பின்வாங்க செய்தது. ஆகவே நினிவேயை விட்டுவிட்டு தர்ஷீசுக்கு போவாம் என கப்பல் ஏறினான். ஆனால் யோனா 1:10 – ல் யோனா தான் கர்த்தருடைய சமூகத்தை விட்டு விலகி ஓடுகிறவன் என்று தன்னை அறிக்கை செய்கிறான்.

எனக்கன்பானவர்களே, தேவன் நம்முடைய வாழ்வில் எதை, எப்படி, எந்தவேளையில், எங்கு செல்ல வேண்டும் என்று தீர்மானித்து வைத்திருக்கிறாரோ அதன்படி செய்யும் போது தான் நாம் தேவனுடைய சமூகத்தில் இருக்கிறோம். தாவீது தன் வாழ்வில் எந்த காரியத்தையும் தேவனிடத்தில் விசாரித்து அவர் என்ன சொல்லுகிறாரோ அதையே செய்கிறபடியால் தேவன் தாவீதை என் இருதயத்திற்கு ஏற்றவன் என்று சாட்சி கொடுத்தார்.

யோனா தேவனுடைய சமூகத்தை விட்டு விலகும் போது தேவ சித்தத்தை விட்டுவிலகும்போது பெருங்காற்று, கொந்தளிப்பு சேதங்கள் மரணபயங்கள் என்று சுற்றியுள்ள ஜனங்களுக்கு உண்டாகிறது. நாம் தேவனுடைய சமூகத்தை விட்டு விலகும் போது நமக்கு மட்டுமல்ல நம்மைச் சார்ந்துள்ள நம் குடும்பம், சபை, ஊழியங்கள் மட்டுமல்ல, நம்முடைய

சமுதாயத்திற்கே நாம் பிரச்சனைகளை உருவாக்கி, நாம் இடறலாக மாறி விடுகிறோம். கர்த்தருடைய ஊழியத்தை நாம் செய்தாலும் கூட கர்த்தர் எந்த இடத்தில் எப்படி நிறைவேற்ற விரும்புகிறார் என்று அவருடைய சித்தத்தை தான் நிறைவேற்ற வேண்டும். தேவ சமூகத்தை விட்டு நாம் விலகாதபடி நம்மை காத்துக் கொள்வோம்.

## விசுவாசிக்கமுடியாத யோனா

தேவனிடத்திலிருந்து தண்டனை பெற்று மீன் வயிற்றில் 3 நாட்கள் ஜெபித்து அறிக்கை செய்த யோனாவிற்கு விடுதலை கிடைத்ததுமட்டுமல்லாமல் மறுபடி தேவன் நினிவே செல்ல பிரசங்கம் செய்ய அழைப்புக் கொடுத்தார். யோனாவும் 3 நாட்கள் இடைவிடாமல் கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கித்தார். அதன்பின்பு நடந்தது என்ன?

**அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து, உபவாசஞ்செய்யும்படிக் கூறினார்கள்: பெரியோர் முதல் சிறியோர்மட்டும் இரட்டுடுத்திக்கொண்டார்கள். இந்தச் செய்தி நினிவேயின் ராஜாவுக்கு எட்டினபோது, அவன் தன் சிங்காசனத்தைவிட்டு எழுந்து, தான் உடுத்தியிருந்த உடுப்பைக் கழற்றிப் போட்டு, இரட்டை உடுத்திக் கொண்டு, சாம்பலிலே உட்கார்ந்தான். (யோனா 3: 5,6).** நினிவேயின் ஜனங்கள் மனந்திரும்பினார்கள். தேவன் மனஸ்தாபப்பட்டு அழிவை கட்டளையிடாமல் இருந்தார்.

யோனா இந்த ஜனங்கள் எப்படி மனந்திரும்புவார்கள்? கடின இருதயமுள்ளவர்கள்; ராஜா சுகபோகமாய் வாழ்பவர்; கர்த்தருடைய வார்த்தைக்கு செவி சாய்க்கமாட்டார் என்றும் நிச்சயமாக தேவ கோபாக்கினை வரும். சோதோமை போல் தேவன் அக்கினியை அனுப்பி அழித்து விடுவார் என விசுவாசித்தான். நினிவே ஜனங்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்ற விசுவாசத்துடன் ஊழியத்தை நிறைவேற்றவில்லை.

இன்னும் கூட பலகோடி மக்கள் வாழும் நம்தேசத்திற்காக நாம் எப்படி ஜெபிக்கிறோம்? எப்படி ஊழியங்களை செய்கிறோம்?. எப்படியாக ஊழியங்களை தாங்குகிறோம். யோனாவை போல் அவிசுவாசத்துடன் இராமல் பாரத தேசம் தேவனண்டை திரும்பும். பாவங்களை அறிக்கை செய்து சிறியோர், பெரியோர் அதிகாரிகள் என முழு தேசம் கிறிஸ்து இயேசுவின் பரிசுத்தமான தேசமாக மாறும் என்ற விசுவாசம் நமக்குள் இருக்கிறதா? அப்படிப்பட்ட விசுவாச கண்களுடன் நாம் தேவனுக்காக பெரியக் காரியங்களைச் செய்வோம்.

## ஆத்தும பாரமில்லாத யோனா

பிதாவாகிய தேவன்நினிவே பட்டணத்தின் இலட்சத்து இருபதினாயிரம் ஜனங்களுக்காக பரிதபித்த படியால் பட்டணத்தை அழிக்காதபடி அவர்கள் மனம்திரும்ப சித்தம் கொண்டு யோனாவை பிரசங்கிக்க அனுப்பினார். ஆத்தும பாரமில்லாத யோனாவிற்கு பாடம் கற்றுக்கொடுக்க தேவன் ஆமணக்குச் செடியை முளைக்கக் கட்டளையிட்டார். அந்த நிழலில் அவன் சந்தோஷப்பட்டிருந்த போது அதை அழித்துப்போட பூச்சியைக் கட்டளையிட்டார். யோனாவுக்கு எரிச்சல் உண்டாயிற்று. மரண பரியந்தம் எரிச்சலாய் இருக்கிறது நலம் என சொல்கிறான்.

**“யோனாவை பார்த்து தேவன் என்ன சொன்னார். (யோனா 4 : 10,11) அதற்குக் கர்த்தர்: நீ பிரயாசப்படாததும், நீ வளர்க்காததும், ஒரு இராத்திரியிலே முளைத்ததும், ஒரு இராத்திரியிலே அழிந்துபோனதுமான ஆமணக்குக்காகப் பரிதபிக்கிறாயே”.**

**“வலதுகைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம்பேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருக ஜீவன்களும் இருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ என்றார்.”**

பிரியமானவர்களே, இவ்வுலகத்தில் சில வேளைகளில் தேவன் கொடுத்த நல் ஆசீர்வாதங்கள் குறைவுபடும் போது, விலகும்போது; இல்லாமல் காணப்படும்போது நாமும் கூட எவ்வளவு எரிச்சல் அடைகிறோம்? மனம் மடிந்து போகிறோம். அப்பொழுதெல்லாம் தேவன் நமக்கு என்ன சொல்ல விரும்புகிறார். அழிந்துப்போகும் சின்ன சின்ன காரியங்களைக் குறித்து வேதனைப்படுகிறாய்? அங்கலாய்க்கிறாய்? ஆனால் என் மனதில் உள்ள ஆத்துமப்பாரத்தை நீ அறிகிறாயா? என்று தேவன் கேட்கிறார்.

புதிய ஏற்பாட்டில் பிதாவாகிய தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரன் இயேசு கிறிஸ்துவையே உலக இரட்சகராக அனுப்பி அன்புக் கூர்ந்தார். இயேசு கிறிஸ்துவும் தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தையும், தம்முடைய ஜீவனையும் ஆத்துமாக்களுக்காக பலியாக கொடுத்தார். இயேசு கிறிஸ்து இன்றும் கிராமங்கள், பட்டணங்கள் தேசங்களுக்காக பிதாவுடன் இணைந்து பரிதபிக்கிறார். யார் என் காரியமாய் போவான்? யாரை நான் அனுப்புவேன்? திறப்பிலே நிற்கக் கூடிய மனிதன் யார்? என் ராஜ்ஜியத்தைக் கட்டுவதற்காக கொடுப்பவன் யார்? என்று ஆத்துமபாரத்துடன் நம்மை கேட்கிறார்.

யோனாவை போல் தேவனுடைய சமூகத்தை விட்டு விலகி, தேவனுடைய இரட்சிப்பின் பணியை விசுவாசமில்லாமல் ஆத்துமப்பாரம் இல்லாமல் தேசத்தின் அழிவை காணுகிறவர்களாய் காணப்படாமல், இயேசு கிறிஸ்துவை போல் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிறவனாக திறப்பில் நின்று ஜெபிக்க ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய தேவனுடைய ராஜ்ஜியத்தைக் கட்டுகிறவர்களாக நம்மை ஒப்புக்கொடுப்போம். தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

## ஷாலோம் ஜெபக்குழு

**பிரியமானவர்களே,** கர்த்தருடைய பெரிதான கிருபையினால் நமது ஷாலோம் ஊழியங்களுக்காக ஜெபிக்கும் அநேக ஜெபக் குழுக்களை தேவன் தந்துள்ளார். இந்த ஜெபக்குழுக்கள் சிறப்பாக செயல்பட்டுவருகின்றமைக்காக தேவனைத் துதிக்கிறோம்.

இதை வாசிக்கின்ற உங்களையும் மாதம் ஒரு முறை கூடி **ஷாலோம் ஊழியங்களுக்காகவும், இந்தியத் தேசத்திற்காகவும்** ஜெபிக்கும்படியாக தேவன் ஏவுவாராகில் உங்கள் பகுதியில் ஒரு ஜெபக்குழுவை ஆரம்பித்து ஜெபிக்க அன்பாய் கேட்கிறோம். மேலும் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள் உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்பி வைக்கிறோம். தேவன்தாமே ஜெபத்தின் மூலம் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக! தொடர்புக்கு : 9698044522, 0461 – 2375468, 2377737

# புத்தாண்டு வாக்குத்தத்தக் கூட்டங்கள் - 2015



கர்த்தருடைய பெரிதான கிருபையால் நமது ஷாலோம் போதகர்கள் மற்றும் சுதேச ஊழியர்கள் குடும்பங்களுக்கென்று 6–ம் தேதியன்று குஜராத் மற்றும் மத்தியப்பிரதேச ஊழியர் குடும்பங்களுக்கென்று வானியாவாவ் (குஜராத்) கிராமத்திலும், 8,9–ம் தேதிகளில் இராஜஸ்தான் ஊழியர் குடும்பங்களுக்கு என்று இராஜஸ்தானிலுள்ள கோய்க்கா மற்றும் செவனியா கிராமத்திலும், பணித்தள அலுவலக ஊழியர்களுக்கென்று தாகோத் பயற்சி மையத்தில் 12–ம் தேதியும் புத்தாண்டு வாக்குத்தத்தக் கூட்டங்கள் நடைபெற்றது. இதில் மொத்தம் 520 ஊழியர்களும் 85 அலுவலக ஊழியர்களும் குடும்பமாக பங்கு பெற்றார்கள்.

துதி ஆராதனை வேளையில் ஊழியர்கள் ஆடிப்பாடி களிகூர்ந்து தேவனைத் துதித்தார்கள். ஆராதனை வேளையில் கர்த்தருடைய பிரசன்னம் அனைவரையும் நிரப்பியது. கடந்த வருடத்தில் தேவன் செய்த மகத்தான காரியங்களை நினைத்து நன்றி செலுத்தினார்கள். அதைத் தொடர்ந்து **பேராயர். தேவதாஸ்** அவர்களின் குடும்பத்தாருக்கு குஜராத், மத்தியப்பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் ஊழியர்கள் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்பு பேராயர் குடும்பத்திற்காக விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. தொடர்ந்து **சகோ. டைட்டஸ்** அவர்கள் வாழ்த்துச் செய்தியளிக்க **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். அதைத் தொடர்ந்து ஷாலோம் மற்றும் இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் வாக்குத்தத்த அட்டைகள் அனைத்து ஊழியர் குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டது.

பின்பு **பேராயர். தேவதாஸ்** அவர்கள் தேவன் ஷாலோம் ஊழியத்திற்கு இந்த ஆண்டிற்கு கொடுத்த வாக்குத்தத்தமாகிய **"நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன்"** – எபிரேயர்–6:14 என்ற வாக்குத்தத்தின் செய்தியை வழங்கினார்கள். ஆதியாகமம்–22:17–ல் இருந்து **1. நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிப்பேன்., 2. நான் உன்னை பெருகவே பெருகப் பண்ணுவேன்., 3. உன் சத்துருக்களின் வாசல்களை சுதந்தரித்துக் கொள்வாய், 4. உனக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்** என நான்கு விதமான ஆசீர்வாதத்தைப் பற்றிக் கூறி, இந்த ஆசீர்வாதத்தை சுதந்தரிக்க ஆபிரகாமைப் போல் **1. தேவனுடைய சிநேகிதனாகவும், 2. அழைப்புக்கு கீழ்ப்படியவும், 3. முழுமையாக ஒப்புக்கொடுக்கவும்** வேண்டுமென்று செய்தியளித்தார்கள்.

அதன்பின். **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் இயேசுவைப் போல் மாற வேண்டும் என்பதைக் குறித்து பகிர்ந்துக் கொண்டார்கள். தொடர்ந்து திருவிருந்து ஆராதனையை **பேராயர். தேவதாஸ்** அவர்கள் நடத்தினார்கள். அனைத்து ஊழியர்களும் இயேசுவின் பாடுகளை கண்ணீரோடு நினைவுகூர்ந்து, தாங்களும் இயேசுவைப் போல் மாற வேண்டும் என்ற அர்ப்பணிப்போடு பங்கு பெற்றார்கள்.

அதைத் தொடர்ந்து அனைத்து ஊழியர்களும் புத்தாண்டு ஸ்தோத்திரக் காணிக்கையை படைத்தார்கள். 2015–ம் ஆண்டில் தரிசனத்துடன் திட்டமிட்டு, இருமடங்காக ஊழியர்கள், சபைகள், ஆத்துமாக்கள் பெருக ஒப்புக்கொடுத்து செயல்பட தங்களை அர்ப்பணித்தார்கள்.

## மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை

**28.12.2014– ஆண்டார்குளம் CSI தேவாலயம்**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கன்னியாகுமரி மாவட்டம் ஆண்டார் குளம் CSI தேவாலயத்தில் 28.12.2014 ஞாயிறு அன்று நடைபெற்ற ஆராதனையில் நமது ஷாலோம் ஊழியர்கள் **சகோ. சுக்தேவ் முனியா** (ம.பி.), **சகோ. தோல்சிங் மேடா** (ம.பி.) ஆகிய இருவரும் அந்த ஆலயப் போதகர் **Rev. V. ஐசக் பாக்கியராஜ்** அவர்கள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டனர். இந்த பிரதிஷ்டை ஆராதனையில் **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் சுதேச ஊழியர்களின் சாட்சியினை மொழிபெயர்த்தோடுஷாலோம் ஊழியங்களைக் குறித்தும் பகிர்ந்துக் கொண்டார்கள்.

இந்த வாய்ப்பினை வழங்கிய ஆலயப் போதகர் **Rev. V. ஐசக் பாக்கியராஜ்** அவர்களுக்காகவும், ஊழியர் குடும்பங்களை ஜெபித்துத் தாங்க முன் வந்த **சகோ. சாம் மோகன் ராஜ்** அவர்கள் குடும்பத்திற்காகவும் மற்றும் சபை அங்கத்தினர் ஒவ்வொருவருக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

---

## மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை

**28.12.2014– மதுரை All Saints தேவாலயம்**

தேவனுடைய பெரிதான கிருபையினால் மதுரை All Saints தேவாலயத்தில் 28.12.2014 ஞாயிறு அன்று நடைபெற்ற ஆராதனையில் நமது ஷாலோம் ஊழியர் **சகோ. ஃபிராங்ளின் பென்னட்** (குஜராத்) அவர்கள், ஆலயப் போதகர் **Rev. V.T. ஜாண்சன்** அவர்கள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டனர். அன்று ஆலயத்தில் நடைபெற்ற இரண்டு ஆராதனைகளிலும் நமது ஷாலோம் திருமண்டல **பேராயர் பிஷப். தேவதாஸ்** அவர்கள் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்துக் கொண்டார்கள்.

இந்த வாய்ப்பினை வழங்கிய ஆலயப் போதகர் **Rev. V.T. ஜாண்சன்** அவர்களுக்காகவும், ஊழியரை ஜெபித்துத் தாங்க முன் வந்த **சகோ. நோபல்ரூபஸ்** அவர்கள் குடும்பத்திற்காகவும் மற்றும் சபை அங்கத்தினர் ஒவ்வொருவருக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

---

## ஷாலோம் உபவாச ஜெபம்

| நாள் | நேரம் |
| --- | --- |
| **14.02.2015,** *சனிக்கிழமை* | *காலை 10.00 மணி முதல் 1 மணி வரை* |

இடம் : **ஷாலோம் கிளை அலுவலகம்,**

**M.T.N.** பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்) வடக்குத் தெரு, **மார்த்தாண்டம்**

தேவ செய்தி : **சகோ. K. கோபி,** குலசேகரம்

தொடர்புக்கு: **சகோ. G. செல்வதுரை, Cell : 94876-89869,**

**சகோ. ஜார்ஜ், Cell : 98944-78405, சகோ. கிங்பெர்ட், Cell : 94868-64820**

# மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை

**28.12.2014– ஆண்டார்குளம் CSI தேவாலயம்**



மிஷனெரிகளின் சாட்சி நேரம்



மிஷனெரிகளின் பிரதிஷ்டை வேளை



ஊழியர்களுக்கு அன்பளிப்புகள் வழங்கப்படுகின்றன



ஆதரவாளர்களின் குடும்பத்தாரோடு

# மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை

28.12.2014 – மதுரை **All Saints** தேவாலயம்



பிரதிஷ்டை வேளை



சாட்சி வேளை



மிஷனெரி ஆதரவுத் தொகையைப் பெறும் ஷாலோம் பேராயர் அவர்கள்



ஆதரவாளர் குடும்பத்துடன் மிஷனெரி குடும்பம்

# பணித்தளத்தில் குஜராத், மத்தியப்பிரதேசம் & இராஜஸ்தான் ஊழியர்களுக்கான புத்தாண்டு வாக்குத்தத்தக் கூட்டங்கள் – 2015



பாடல் வேளை



ஆராதனை வேளை



பிஷப் தேவதாஸ் அவர்கள் குடும்பத்திற்கு கலாச்சார வரவேற்பு



கூடியிருந்த ஊழியர் மற்றும் ஊழியக்காரிகளில் ஒரு பகுதி



தேவ செய்தி – பிஷப் தேவதாஸ் அவர்கள்



வாழ்த்துச் செய்தி – சகோ. டைட்டஸ் அவர்கள்





புத்தாண்டு காணிக்கை கவர்களுடன் சுதேச ஊழியர்கள்



கர்த்தருடைய பந்தி



பிஷப் அவர்கள் குடும்பத்திற்கான சிறப்பு ஜெபம்

## 2015 –ம் ஆண்டிற்கான ஊழியத்திட்டங்களை நிறைவேற்ற ஜெபியுங்கள்

**திருச்சபை வளர்ச்சிப் பணிகள்**

- தேவ கிருபையால் மூன்று மாநிலங்களிலும் 540 ஊழியர்கள் மூலமாக 600க்கும் அதிகமான சபைகள் இருக்கிறது. இந்த வருடம் அனைத்து சபைகளும் ஜெபிக்கிற, ஆத்தும ஆதாயம் செய்கிற, உதாரத்துவமாக கொடுக்கிற, சாட்சியுள்ள சபைகளாக மாற விசேஷக் கூட்டங்கள் நடத்தப்பட ஜெபியுங்கள்.
- சபைப் பராமரிப்பு, வளர்ச்சி மற்றும் நிர்வாகம் ஆகியவற்றைப் பற்றி உரிய முறையில் கற்றுக் கொடுக்க ஜெபியுங்கள்.
- கர்த்தருக்கு சித்தமானால் 3 மாநிலங்களிலும் 3 ஷாலோம் திருமண்டலங்கள் உருவாக்கப்பட உள்ளது. அதற்காக இந்த ஆண்டு நடைபெறும் ஆயத்தப் பணிகளுக்காக ஜெபியுங்கள்.

**மூப்பர்கள் பயிற்சிகள்**

- மூன்று மாநிலங்களிலும் உள்ள ஒவ்வொரு சபையிலும் 7,10,12 மூப்பர்கள் வீதம் சுமார் 5000க்கும் அதிகமான மூப்பர்களுக்கென்று இந்த ஆண்டு 2 நாட்கள் கொண்ட விசேஷ பயிற்சி முகாம்கள் நடத்தப்பட ஜெபியுங்கள்.

**சிறுவர்கள் மற்றும் வாலிபர்கள் பயிற்சிகள்**

- இவ்வருடம் 3 மாநிலங்களிலுமுள்ள சபைகளில் உள்ள சுமார் 10,000 வாலிபர்களுக்கென்று 30 முகாம்கள் நடத்தப்பட ஜெபியுங்கள்.
- இந்த வருடம் 3 மாநிலங்களிலும் 500 ஞாயிறு பள்ளி ஆசிரியர்களுக்கு நேர்த்தியான முறையில் சிறந்த பயிற்சியளிக்கப்படவும் அதன் மூலம் 30,000 சிறுவர்கள் ஞாயிறு பள்ளியின் மூலம் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபியுங்கள்.
- இந்த ஆண்டு சுமார் 40,000 சிறுவர்களுக்கென நடைபெறவுள்ள V.B.S Training Programme –ற்காகவும், அதற்குரிய ஆயத்தங்களுக்காகவும், தேவைகளுக்காகவும் ஜெபியுங்கள்.

**சுகமளிக்கும் கூட்டங்கள்**

- மாதந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 48 இடங்களில் நடைபெறவுள்ள 500–க்கும் அதிகமான சுகமளிக்கும் கூட்டங்களுக்காகவும், தேவன் ஊழியர்களை வல்லமையாகப் பயன்படுத்தவும், அநேக புதிய ஆத்துமாக்கள் பங்கு பெறவும், அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெறவும் ஜெபியுங்கள்.

**பணித்தள அலுவலகப்பணிகள்**

- Administration & maintenance, Finance, Media, Literature, Prayer Network, Training Unit, Communication Dept & reporting (Sponsor Related Dept.), Construction Dept, Shalom Charity Mission ஆகியவற்றின் மூலம் நடைபெறும் பணிகளுக்காகவும், அதற்கு தேவையான ஆட்களை தேவன் தரவும், அவர்கள் தரிசனத்தோடு இணைந்து செயல்படவும் ஜெபியுங்கள்.

## 2015-க்கான சிறப்புத் திட்டங்கள்

- நமது தாகோத் பணித்தள அலுவலகக் கட்டிடம் 30 வருடங்கள் ஆகிவிட்டது. இதன் மேல் கட்டிடம் கட்டுவது இயலாத காரியம். ஆகவே அதை இடித்து விட்டு, அனைத்து பணிகளும் ஒரே இடத்தில் நடைபெற குறைந்தது, 2 அடுக்கு கட்டிடம் கட்டப்படவும், அதற்கான தேவை சுமார் **ரூ. 80 இலட்சங்கள்** சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.
- மத்தியப்பிரதேசத்திலுள்ள அந்தர்வேலியாவில் 100 x 40 அளவில் ஊழியர்களுக்காக பயிற்சி கொடுப்பதற்கு பயிற்சி மையம் கட்டப்படவும் அதற்கான தேவை சுமார் **ரூ. 40 இலட்சங்கள்** சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.
- இந்த ஆண்டு ரூ. 2 இலட்சம் மதிப்பில் 100 ஆலயங்களும், 5 இலட்சம் மதிப்பில் 20 ஆலயங்களும் கட்டப்படவும், அதற்கான தேவை **ரூ. 3 கோடி** சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.
- இராஜஸ்தான் பிஜல்பூரில் உள்ள நமது ஷாலோம் பள்ளியில் LKG முதல் 8–ம் வகுப்பு வரை உள்ளது. வகுப்புகள் நடைபெற கட்டிடங்கள் கட்டுவதற்கான தேவை **ரூ. 30 இலட்சங்கள்** சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

## விசேஷ ஜெபக்குறிப்புகள்

- சபைகளுக்கு விரோதமாக எழும்பும் எதிர்ப்புகள் மற்றும் மிரட்டல்கள் மாற ஜெபியுங்கள்.
- அரசு மற்றும் அரசு அதிகாரிகள் உண்மையாய் நமக்கு ஒத்துழைக்க ஜெபியுங்கள்.
- இந்த வருடம் எந்த வியாதியோ, விபத்துக்களோ, மரணமோ வராதபடிக்கு தேவன் ஊழியர்களையும் அவர்கள் குடும்பங்களையும் தமது செட்டைகளின் கீழ் பாதுகாக்கும்படி ஜெபியுங்கள்.
- ரூ. 500 மற்றும் ரூ. 1000 கொடுக்கும் ஷாலோம் ஆதரவாளர்களை தேவன் எழுப்பித்தரவும், பிரதிநிதிகள் எழும்பவும் ஜெபியுங்கள்.

**தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் நடைபெறும்**

## வாக்குத்தத்த உபவாச ஜெபக் கூடுகை

நாள் : **02.02.2015 (திங்கட்கிழமை)** நேரம் : **காலை 9.15 முதல் 1.00**

தேவச் செய்தி : ***Prof. C.S.* கிறிஸ்டோபர்,** பாளையங்கோட்டை

இடம் : **அன்பு பகிர்வு இயக்கம், தலைமை அலுவலகம்**

New No. 5A/323, Old.No. 5/168, கால்டுவெல் காலனி 3 வது தெரு, தூத்துக்குடி – 628 008.

**தேவ பிள்ளைகள் அனைவரும் குடும்பமாய் கலந்துக் கொண்டு ஷாலோம் ஊழியங்களுக்காகவும் இந்தியத் தேசத்திற்காகவும் ஜெபித்து தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள அன்பாய் அழைக்கிறோம்.**

தேவனுக்கே மகிமை!

# 2014ம் ஆண்டின் பணித்தள அறிக்கை

**“மகிழ்ந்து களிகூரு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்”** (யோவேல் 2:21) என்ற வாக்குத்தத்தத்தின்படியே 2014–ம் வருட ஊழியத்தில் கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்தார்.

## I. சிறப்புக் கூடுகைகள் (Special Meetings)

### 1. ஊழியர் கூடுகை (Sevak Meeting)

2014 ஜனவரி 6 முதல் 16 வரை குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் சுதேச ஊழியர்கள் 520 குடும்பங்களுக்கும், பணித்தள அலுவலக ஊழியர்கள் மற்றும் Project ஊழியர்கள் 122 பேருக்கும் புதிய வருட சிறப்புக் கூடுகை நடத்தப்பட்டது. வாக்குத்தத்தச் செய்தியைக் கொடுத்து, ஜெபித்த போது ஆவியானவர் அபரிவிதமாய் இறங்கி வந்தார். இதைத் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் தவறாமல் ஊழியர்களின் கூட்டத்தை நடத்தத் தேவன் கிருபைச் செய்தார். குஜராத் மற்றும் மத்தியப்பிரதேச ஊழியர்களுக்கு தாகோத் பயிற்சி மையத்திலும், இராஜஸ்தான் ஊழியர்களுக்கு கோய்க்கா மற்றும் செவனியா பகுதிகளிலும் கூட்டம் நடைபெற்றது. ஊழியர்கள் உற்சாகமாய் பங்குபெற்று, ஆடிப்பாடி தேவனை ஆராதித்து ஒவ்வொரு மாதமும் புதிய வல்லமையைப் பெற்றார்கள்.

### 2. வட்டாரத் தலைமை ஊழியர்கள் கூடுகை (Area Leaders Meeting)

மூன்று மாநிலங்களிலுமுள்ள மூத்த ஊழியர்கள் அதாவது தலைமை ஊழியர்களை அவ்வப்போது சந்தித்து, ஊழியங்களைக் குறித்துக் கலந்தாலோசித்து ஒவ்வொரு காரியங்களையும் திட்டமிட்டு செயல்படுத்த தேவன் கிருபைச் செய்தார்.

### 3. பணித்தள அலுவலக ஊழியர்கள் கூடுகை (Field Office Staff Meeting)

ஒவ்வொரு மாதமும் பணித்தள அலுவலக ஊழியர்களுக்கென்று கூட்டம் நடத்தப்பட்டு, அதில் அந்தந்த மாதத்திற்குரிய ஊழியத் திட்டங்கள் விவரிக்கப்பட்டு, விசேஷ ஜெபங்களும் ஏறெடுக்கப்பட்டது. மட்டுமல்லாமல், அனுதினமும் காலை 9.30 மணிக்கு அலுவலக ஊழியர்களுக்குக் காலைத் **“தியான ஜெபம்”** நடைபெற்றது.

### 4. Project ஊழியர்கள் கூடுகை (Project Staff Meeting)

மாதந்தோறும் 30 ஆம் தேதி குஜராத் மாநிலத்திலுள்ள தாகோத் பயிற்சி மையத்தில் வைத்து, குஜராத் ஹிரோலா & ஜெரியிலுள்ள CDC ஊழியர்கள் மற்றும் மத்தியப்பிரதேசம் அந்தர்வேலியாவிலுள்ள CDC ஊழியர்கள் அனைவருக்கும் கூட்டம் நடத்தப்பட்டது.

## 5. தலைமை ஊழியர்கள் மனைவிமார் கூடுகை (Leader Evangelists' Wives Meeting)

2014 ஜனவரி மாதம் 20 முதல் 26 வரை தலைமை ஊழியர்களின் மனைவிமார்களுக்கென்று சிறப்பு அபிஷேகக் கூட்டம் நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் முதல் நாள் தாகோத் பயிற்சி மையத்தில் 150 ஊழியக்காரிகள் உபவாசத்தோடு வந்து இந்தக் கூட்டத்தில் பங்குப் பெற்றார்கள். பாடல், ஆராதனை, சாட்சிகள், மற்றும் சிறப்புச் செய்தியும், விசேஷ ஜெபமும் ஏறெடுக்கப்பட்டது. **சகோதரி. Dr. வஹிதா தேவதாஸ்** அவர்கள் இந்தக் கூட்டத்தினை பொறுப்பாக நடத்தி வருகிறார்கள்.

## 6. ஊழியக்காரிகளுக்கான பகுதிவாரியான கூடுகை (Area wise Sevikaben Meeting)

2014 ஆம் ஆண்டில் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் 500 ஊழியர்களின் மனைவிமார் அனைவரையும் சந்தித்து, அந்தந்த மாநிலங்களில் 4 இடங்களில் கூட்டங்களை நடத்தினார்கள். மூத்த ஊழியக்காரிகள் தலைமையில் அந்தந்தப் பகுதிகளில் உள்ள மற்ற ஊழியர்களின் மனைவிமார்களுக்கு சுமார் 30 இடங்களில் கூட்டங்கள் மாதந்தோறும் நடத்தப்பட்டது.

## 7. சபை விசுவாசப் பெண்கள் கூடுகை (Church Belivers Ladies Meeting)

போதகர்கள் மற்றும் சுதேச ஊழியர்களின் மனைவிமார்கள் தங்கள் சபைகளில் மாதந்தோறும் விசுவாசிப் பெண்களுக்கென்று கூட்டங்களை நடத்தி வருகிறார்கள். இதில் 1 கோடி பீல் மக்களின் இரட்சிப்பிற்காக பாரத்தோடும் கண்ணீரோடும் ஆவியில் நிறைந்து ஜெபிக்கிறார்கள்.

மேலும் பயிற்சிப் பெற்ற 150 மூத்த ஊழியக்காரிகள் 50 குழுக்களாகப் பிரிந்து 600 ஷாலோம் திருச்சபையில் அனைத்து விசுவாசிப் பெண்களுக்கு விசேஷக் கூட்டங்களை நடத்தினார்கள். இந்தக் கூட்டங்களில் தேவன் சபையின் பெண்களை அபிஷேகத்தால் நிறைத்து, அற்புத விடுதலையையும் கொடுத்தார். அவர்கள் ஆவியில் பெலப்பட்டார்கள்.

## 8. ஞாயிறுப் பள்ளி ஆசிரியர்கள் கூடுகை (Sunday School Teachers Meeting)

பிப்ரவரி 2,8,15 தேதிகளில் குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களிலுள்ள ஞாயிறுப் பாடசாலை ஆசிரியர்கள் சுமார் 400 பேர்களுக்கு விசேஷக் கூட்டங்கள் நடத்தப்பட்டது. இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை இவர்களுக்கு விசேஷக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. இதில் ஆசிரியர்கள், ஞாயிறுப் பாடசாலை மாணவர் வருகைப் பதிவேடு (Attendance Register) மற்றும் காணிக்கைப் பெட்டியையும் கொண்டு வருவார்கள். இவர்களுக்கு ஒவ்வொரு முறையும் விசேஷித்த அபிநயப் பாடல் (Action Song) மற்றும் வேதபாடக் கதைகள், மனப்பாட வசனம் கற்றுக் கொடுக்கப்படுகிறது. மட்டுமல்லாமல் இவர்களை உற்சாகப்படுத்தும் வண்ணமாய் மாதந்தோறும் சிறிய காணிக்கையும் இவர்களுக்கு வழங்கப்படுகிறது.

### 9. சிறப்பு ஆத்தும அறுவடைத் திட்ட ஊழியர் கூடுகை (Special Soul Winning Project Sevak Meeting)

இந்தத் திட்டத்திற்கென்று சிறப்புப் பயிற்சிப் பெற்ற 48 ஊழியர்களுக்கும் ஒவ்வொரு மாதமும் சிறப்புக் கூட்டம் தாகோத் பயிற்சி மையத்தில் வைத்து நடைபெற்று வருகிறது. இந்தக் கூட்டங்களில் 48 ஊழியர்களும் வந்து தேவன் பணித்தளங்களில் செய்த அற்புதங்களைக் குறித்துச் சாட்சிக் கொடுத்து தேவனை மகிமைப்படுத்துகிறார்கள். இந்தக் கூட்டங்களின் மூலம் மரித்தோர் உயிரோடு எழும்பியுள்ளார்கள். பின்பு அடுத்த மாத சுகமளிக்கும் கூட்டங்களைக் குறித்துக் கலந்தாலோசித்து நல்ல கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

## II. ஜெப ஊழியங்கள் (Prayer Ministries)

### 1. சங்கிலித் தொடர் ஜெபம் (Chain Prayer)

நம்முடைய ஷாலோம் சுதேச ஊழியர்கள் குடும்பமாகத் தினமும் ஒரு ஊழியர் குடும்பம் தாகோத் பயிற்சி மையத்தில் உள்ள சிறு அறையில் தொடர்ச்சியாக ஜெபித்து வருகிறார்கள். இதில் ஜெபக்குறிப்புகளும், தாலுகா மற்றும் கிராமங்களின் பெயர்களை வைத்தும் கருத்தாய் சொந்த ஜனம் இரட்சிக்கப்பட ஜெபித்து வருகிறார்கள்.

### 2. அந்நிய பாஷை ஜெபம் (Tongues Prayer)

ஊழியக்காரிகள் மாதத்திற்கு ஒருமுறை அதாவது முதல் வாரத்தில் 3 மாநிலங்களிலும் 8 இடங்களில் அந்தந்தப் பகுதிகளில் கூடி 3 மணி நேரம் அந்நிய பாஷை ஜெபத்தினை ஏறெடுத்து வருகிறார்கள். இதில் அநேகர் தரிசனங்களைக் காண்கிறார்கள். இது நமது தரிசனப்பணியில் இன்னும் முன்னேறிச் செல்ல உற்சாகமளிப்பது மட்டுமல்லாமல், ஊழியக்காரிகள் தங்கள் சபைகளில் உள்ள மூப்பர்களின் மனைவிமார்களுடன் இணைந்து மாதந்தோறும் 1 மணி நேரம் அந்நிய பாஷை ஜெபம் செய்கிறார்கள்.

### 3. பெண்களுக்கான உபவாச ஜெபம் (Ladies Fasting Prayer)

சுதேச ஊழியர்களின் மனைவிமார்கள் அந்தந்தப் பகுதி வாரியாகப் பிரிக்கப்பட்டு, 7,7 நாட்கள் முறையே வருடம் முழுவதும் தொடர் உபவாச ஜெபம் செய்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் 1 நாள், 3 நாள், 21 நாள், 40 நாள் என்று பிரித்தும் உபவாசம் இருந்து சொந்த ஜனம் இரட்சிக்கப்படும்படி ஜெபித்து வருகிறார்கள்.

### 4. ஆண்கள் மற்றும் பெண்களுக்கான முழு இரவு ஜெபம் (All Night Prayer)

ஒவ்வொரு மாதமும் ஆண்கள், பெண்கள் முறையே மாதத்திற்கு ஒருமுறை தாகோத்தில் வைத்து நடத்தப்பட்டு வரும் முழு இரவு ஜெபத்தில் பணித்தள அலுவலர்கள் மற்றும் தலைமை ஊழியர்கள் பங்கெடுக்கிறார்கள். இதில் 1 கோடி பீல் மக்கள் சந்திக்கப்படும்படியாய் பாரத்தோடு ஜெபிக்கிறார்கள்.

**5. தொலைபேசி ஜெப ஊழியம்** (Telephone Prayer Ministry)

தொலைபேசி மூலம் விசுவாசிகள் இரவும், பகலும் ஜெபத்திற்காக தொடர்புக்கொள்ளுகிறார்கள். தேவன் தொலைபேசி ஜெபத்தைக்கேட்டு மக்களுக்கு சுகத்தைக் கட்டளையிடுவதோடு, நோய்களிலிருந்து விடுதலை தருகிறார். தேவன் அவர்களை உடனடியாக விடுவிக்கிறார். பீல் சுதேச ஊழியர்களும் கூட தங்கள் சபையின் விசுவாசிகளுக்குத் தொலைபேசி மூலம் ஜெபிக்கிறார்கள்.

ஜனவரி 29,30,31 மற்றும் பிப்ரவரி 1–ம் தேதிகளில் இயேசு அழைக்கிறார் ஊழியத்தின் மூலம் தேசத்திற்காகவும் தேர்தலுக்காகவும் 72 மணிநேர தொடர் ஜெபம் தாகோத் பயிற்சி மையத்தில் வைத்து நடைபெற்றது. இதில் அனைத்து (10 ஸ்தாபனங்கள்) ஸ்தாபனங்களின் ஊழியர்களும் விசுவாசிகளும், சபைப் பாகுபாடின்றி சுமார் 5600 பேர் பங்கு பெற்று தேசத்திற்காக ஜெபித்தார்கள்.

**6. 40 நாள் உபவாச ஜெபம்** (40 Days Fasting Prayer)

லெந்து நாட்களில் சபையார் யாவரும் 40 நாட்கள் உபவாச ஜெபத்தை ஏறெடுக்கிறார்கள். கூலி வேலை செய்கிறவர்களும் கூட மிகுந்த உற்சாகமாய் உபவாசித்து ஜெபம் செய்கிறார்கள். இந்த 40 நாட்களும் சபையில் ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு நாள் என்று தொடர் உபவாச ஜெபம் செய்து வருகிறார்கள். மேலும் ஒவ்வொரு வெள்ளியும் சபையார் அனைவரும் சேர்ந்து உபவாச ஜெபம் ஏறெடுக்கிறார்கள்.

**7. பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான சிறப்பு ஜெபம்**
(Special Prayer for Exam Students)

3 மாநிலங்களிலும் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கென்று பிப்ரவரி மாதம் மத்தியப்பிரதேசத்தில் 9–ம் தேதியிலும் , இராஜஸ்தானில் 16–ம் தேதியிலும் மற்றும் குஜராத்தில் 23–ம் தேதியிலும் விசேஷ ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இதில் சுமார் 842 க்கும் அதிகமான மாணவ மாணவிகள் கலந்துக் கொண்டு ஜெபித்துச் சென்றார்கள். இதில் **சகோ. டைட்டஸ்** மற்றும் **சகோதரி. மெர்லின் டைட்டஸ்** இருவரும் தங்கள் அனுபவங்களிலிருந்து ஆலோசனைகளை வழங்கினார்கள். கலந்து கொண்ட பிள்ளைகள் **"எங்களுக்கு இருந்த தேர்வைக் குறித்த பயம் நீங்கி நாங்கள் தைரியம் பெற்றோம்"** என சாட்சி பகிர்ந்து கொண்டார்கள். பின்பு ஜெபித்து பேனா, வசன ஸ்டிக்கர், மற்றும் சாக்லேட் என அன்பளிப்புகளுடன் உணவும் வழங்கப்பட்டது. இதன் விளைவாக இந்த மாணவர்கள் 70,80,90 சதவீத மதிப்பெண்களைப் பெற்று பலதரப்பட்ட உயர் கல்வியில் சேர்ந்துப் படித்து வருகிறார்கள்.

## III. பயிற்சிகள் (Trainings)

### 1. புதிய சுதேச ஊழியர்களுக்கான பயிற்சி (New Evangelists Training)

கடந்த ஆண்டு சுமார் 40 புதிய ஊழியர்களுக்கு 1 மாத ஊழியம் மற்றும் வேதாகமப் பயிற்சி அளிக்கப்பட்டது. இவர்கள் யாவரும் புதிய கிராமங்களிலிருந்து வந்தவர்கள். கர்த்தருக்காக ஊழியம் செய்யத் தங்களை அர்பணித்து, பயிற்சிப் பெற்று புதிய சபைகளை உருவாக்கி வருகிறார்கள். ஊழியர்களைத் தேவன் வல்லமையாகப் பயன்படுத்தி வருகிறார்.

### 2. சிறுவர் வேதாகமப் பள்ளி ஆசிரியர் பயிற்சி (CBC) Children Bible Class Teachers Training

கடந்த ஆண்டு, சிறுவர் வேதாகமப் பள்ளி (CBC) இயக்குநர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஞாயிறுப் பள்ளி ஆசிரியர்களுக்கும் விசேஷப் பயிற்சிக் கொடுக்கப்பட்டது. இதில் சுமார் 1000 பேர்களுக்கு 3 மாநிலங்களில் 3 பகுதியாகப் பிரித்து 6 நாட்கள் பயிற்சியளிக்கப்பட்டது. **“ஜெபமே ஜெயம்”** என்ற தலைப்பில் பாடங்கள், கதைகள், பாடல்கள், குறுநாடகங்கள் போன்றவைகள் கற்றுக் கொடுக்கப்பட்டது. விசேஷமாக தானியேலின் ஜெபத்தைப் பற்றி குறுநாடகம் நடித்துக் காண்பிக்கப்பட்டது. பயிற்சிப் பெற்றவர்கள் சபைகளில் சென்று 35,000 சிறுவர்களுக்கு CBC வகுப்புகளை நடத்தினார்கள். விசுவாசிகளல்லாத குடும்பத்தின் சிறுவர்களும் அநேகர் இதில் பங்குப் பெற்று தேவாசீர்வாதம் பெற்றார்கள். சபையின் மூப்பர்கள் சிறுவர்களுக்கு சிற்றுண்டி மற்றும் சாப்பாடு கொடுத்து சிறுவர்களை உற்சாகப்படுத்தினார்கள்.

### 3. சபை மூப்பர்களுக்கான சீஷத்துவப் பயிற்சி (Bild (T3)Training)

சபையின் மூப்பர்களுக்கு சபை வளர்ச்சி மற்றும் சபையின் ஒழுங்குகள் குறித்து விசேஷ பயிற்சி மார்ச் மாதம் அளிக்கப்பட்டது. இதில் 252 இளைய ஊழியர்கள் மற்றும் மூப்பர்களுக்கு 3 நாட்கள் சீஷர்களை உருவாக்குதல் என்ற தலைப்பில் 3 பிரிவாகப் பயிற்சிகள் கொடுக்கப்பட்டது. இந்த 252 பேரும் தலா 5 பேரை சீஷர்களாக உருவாக்கியுள்ளார்கள். ஆக மொத்தம் 1260 பேர் இந்தப் பயிற்சியின் மூலம் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பயிற்சிகள் அனைத்தையும் **சகோ. ஜெயராஜ்** மற்றும் **சகோ. கேரட்** அவர்கள் பொறுப்பாக நடத்தினார்கள். இந்த Bild Training பயிற்சித் திட்டங்கள் Bless India ஸ்தாபனத்தின் மூலமாக நடத்தப்பட்டது.

### 4. பப்பட் ஷோ பயிற்சி (Puppet Show Training)

ஷாலோம் ஊழியத்தில் சிறுவர் ஊழியத்தில் முக்கியப் பங்கு வகிக்கும் ஞாயிறு பள்ளி ஆசிரியர்கள் மற்றும் Project Staff –களுக்கு பப்பட் ஷோ எப்படி நடத்துவது மற்றும் அவற்றை எப்படிக் கையாள வேண்டும் என்பதைக் குறித்து விசேஷ பயிற்சி ஏப்ரல் 20–ம் தேதி மற்றும் 21–ம் தேதி 2 நாட்கள் நடைபெற்றது. இதில் 80 பேர் பங்கு பெற்றனர். பயிற்சி அளிப்பதற்கு சென்னையிலிருந்து **சகோ. ரமேஷ்** மற்றும் **சகோ. பிளஸ்வின்** அவர்கள் வந்து நடத்தித் தந்தார்கள். இதை **சகோ. ஸ்டான்லி** அவர்கள் பொறுப்பேற்று நடத்தினார்கள்.

**5. தலைமைத்துவ பயிற்சி (Leadership Training)**

**Dr.Abel** அவர்கள் தலைமையில் **Dr.Jay Clark** (U.S) அவர்கள் வந்து அகமதாபாத்தில் கடந்த வருடத்தில் 2 நாள் பயிற்சி மூன்று முறை நடத்தினார்கள். மேலும் ஒரு முறை Skype Video மூலம் பயிற்சி நடத்தினார்கள். இதில் ஷாலோம் பணித்தள அலுவலகத்தில் ஊழியம் செய்யும் முக்கியமான ஊழியர்களும் Project –ல் உள்ள 3ஒருங்கிணைப்பாளர்களும் பங்கு பெற்றார்கள். இந்த பயிற்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் ஊழியத்தில் இன்னும் முன்னேறிச் செல்ல ஊக்கத்தை அளித்தது.

**6. நிர்வாகம் மற்றும் ஒருங்கிணைப்பு செயல்பாடுகள் (Administration & Coordinating Activities)**

Dr.Abel & Dr.Jolly Abel அவர்கள் குடும்பமாக தாகோத் பணித்தளத்திற்கு வந்து ஒரு முறை 15 நாட்களும் மற்றும் மே மாதத்தில் 1 மாதம் முழுவதும் தங்கியிருந்து ஷாலோம் ஊழியத்தின் Network, Reports, Arrangements போன்ற காரியங்களை நேர்த்தியாக வடிவமைத்துக் கொடுத்தார்கள்.

நமது ஷாரோன் மிஷன் நினைவு மருத்துவமனையில் கடந்த மே மாதம் Dr. Inbakumar அவர்கள் விடுமுறைக்காக தென் இந்தியா சென்ற நாட்களில் Dr. Abel அவர்கள் முழுப்பொறுப்பேற்று மருத்துவப் பணியை நிறைவேற்றினார்கள்.

## IV. சிறப்பு முகாம்கள் (Special Camps)

**1. சிறுவர் முகாம்கள் (Children Camps)**

2014 நவம்பர் மாதத்தில், 4 வயது முதல் 12 வயது வரையுள்ள நமது விசுவாசி சிறுவர்களுக்கு விசேஷித்த சிறுவர் முகாம்கள் 9 இடங்களில் நடத்தப்பட்டது. இதில் சுமார் 2004 பிள்ளைகள் பங்குப் பெற்று தேவாசீர்வாதம் பெற்றார்கள். சிறுவர்கள் பாடல்களைப் பாடி ஆடி உற்சாகத்தோடு தேவனை ஆராதித்தார்கள். இந்த ஆராதனையில் அநேகர் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டார்கள். **சகோ. ஃப்ராங்க்ளின்** அவர்கள் ஆராதனையைப் பொறுப்பாக நடத்தினார்கள். **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் யோவான் 15 : 14 இன் படி இயேசுவில் நிலைத்திருங்கள் என்ற தலைப்பில் நடத்தினார்கள். இம்முகாம்களில் குழுக் கலந்துரையாடல் நடத்தப்பட்டதால் பிள்ளைகள் “இயேசுவில் எப்படி நிலைத்திருப்பது” என்பதைக் குறித்த தெளிவைப் பெற்றார்கள். மற்றும் நடத்தப்பட்ட குறு நாடகம் பிள்ளைகளின் உள்ளத்தில் பதிந்து விட்டது. பிள்ளைகள் அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டார்கள். Puppet Show, Bible Quiz போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு பதிலளித்தப் பிள்ளைகளுக்கு சிறு பரிசுகள் வழங்கப்பட்டது. கடைசியில் உணவு வழங்கப்பட்டது.

### 2. மூப்பர்கள் முகாம்கள் (Elders Camps)

கடந்த ஆண்டு பிப்ரவரியில் 11,12,13 ஆகிய தேதிகளில் 3 மாநிலங்களிலும் சேர்த்து 600 சபைகளில் மூப்பர்களுக்கென்று விசேஷக் கூட்டங்களை **பேராயர். தேவதாஸ்** அவர்கள் பொறுப்பாக நடத்தினார்கள். ஒவ்வொரு சபையிலிருந்தும் 5 முதல் 7 மூப்பர்கள் வீதம் சுமார் 4000 மூப்பர்கள் பங்குப் பெற்று அபிஷேகத்தினால் நிரம்பி வல்லமையைப் பெற்றுக் கொண்டார்கள். 1 மணி நேரம் சொந்த ஜனம் இரட்சிப்பிற்காக ஆத்தும பாரம் பெற்று, பாரத தேசத்தின் ஆசீர்வாதத்திற்காகவும், சபை எழுப்புதலுக்காகவும் ஜெபித்து சபையின் போதகர்களுக்கு துணையாக இருந்து செயல்பட்டு வருகிறார்கள்.

### 3. மருத்துவ முகாம் (Medical Camp)

நமது ஷாரோன் நினைவு மிஷன் மருத்துவமனையில், 2014–ல் சுமார் 3351 பிணியாளிகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மேலும் நமது மருத்துவமனையில் நடைபெற்ற மருத்துவ முகாமில் **டாக்டர். பிரேமா கிறிஸ்டோபர்** (பாளையங்கோட்டை) அவர்கள் கலந்து கொண்டு 220 பேர்களுக்கு மருத்துவச் சிகிச்சையளித்தார்கள். மேலும் **டாக்டர். ராஜேஷ்** சி.எம்.சி வேலூர் மருத்துவமனையிலிருந்து வந்து ஒரு வாரம் தங்கி அறுவை சிகிச்சை முகாம் நடத்தினார்கள். 2014–ம் ஆண்டில் 1065 புதிய நோயாளிகள் நமது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்கள்.

## V. சபையின் செயல்பாடுகள் (Church Activities)

### 1. ஞாயிறு ஆராதனைகள் (Sunday Services)

ஷாலோம் ஊழியத்தில் தேவன் கொடுத்த அனைத்துச் சபைகளிலும் வாரந்தோறும் ஒழுங்காக ஞாயிறு ஆராதனை நடைபெறும்படியாகத் தேவன் கிருபைச் செய்தார். போதகர்கள், சுதேச ஊழியர்கள் மற்றும் மூப்பர்கள் இந்த ஆராதனையைப் பொறுப்போடு நிறைவேற்றினார்கள்.

### 2. ஞானஸ்நான ஆராதனை (Baptism Service)

கடந்த வருடத்தில் மூன்று மாநிலங்களிலும் சுமார் 5200 புதிய விசுவாசிகள் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றார்கள்.

### 3. திருவிருந்து ஆராதனை (Holy Communion Service)

திருவிருந்து ஆராதனை ஒவ்வொரு மாதமும் முதல் வாரம் நடத்தப்பட்டு வருகிறது. அபிஷேகம் பண்ணப்பட்ட போதகர்கள் இதை நடத்துகிறார்கள். இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் எடுத்தவர்களுக்கு வழங்கப்படுகிறது.

### 4. ஞாயிறுப் பள்ளி (Sunday School)

400 ஷாலோம் சபைகளில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் சிறுவர்களுக்கென்று ஞாயிறுப் பாடசாலை நடத்தப்பட்டு வருகிறது. இதில் 3 இராஜ்ஜியங்களிலும் சுமார் 15000

சிறுவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டு வருகிறார்கள். இதனைப் பயிற்சிப் பெற்ற வாலிபர்கள் பொறுப்பாக நடத்தி வருகிறார்கள். மற்றும் 3 மாநிலங்களிலும் இவ்வூழியத்தைக் கண்காணிக்க மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

### 5. சிறுவர் வேதாகமப் பள்ளி (Children Bible Class (CBC))

2014 ஆம் ஆண்டில் **"ஜெபமே ஜெயம்"** என்ற தலைப்பில் மே மாதம் 10 நாட்கள் CBC வகுப்புகள் நடத்தப்பட்டது. இதில் சுமார் 600 சபைகளிலிருந்து 35,000 பிள்ளைகள் பங்குப் பெற்று தேவாசீர்வாதம் பெற்றார்கள். இதில் கிராமங்களில் உள்ள விசுவாசிகள் அல்லாத குடும்பத்தில் உள்ள பிள்ளைகளும் வந்து, பங்குப் பெற்று, இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். இதற்காக தேவனுக்கு மகிமை செலுத்துகிறோம்.

### 6. துதி ஆராதனை (Praise & Worship Service)

இரண்டு மாதத்திற்கொருமுறை 70 சுதேச ஊழியக்காரிகளாகக் கூடி தாகோத் பயிற்சி மையத்தில் வைத்து மாலை 6 மணி முதல் இரவு 11 மணி வரை தொடர்ந்து 5 மணி நேரம் துதி ஆராதனை நடத்தினார்கள். இதில் நடனமாடித் தேவனை துதித்து, ஆவியில் நிறைந்து தேவனை ஆராதிப்பதைப் பார்த்தபோது பரலோகமே இறங்கி வந்தது போன்ற ஒரு அனுபவம் கிடைத்தது. இந்த ஆராதனையில் சிலர் அற்புத சுகம் பெற்று, ஆவியில் உற்சாகமடைந்து தரிசனங்களையும், தீர்க்கதரிசன வரங்களையும் பெற்றார்கள்.

## VI. விழாக்கள் (Festivals)

### 1. ஷாலோம் மிஷன் தினம் (Shalom Mission Day)

ஜுலை 1 ஆம் தேதி கோய்க்கா பேராலயத்தை **Prof. C.S. கிறிஸ்டோபர்** (பாளை) மற்றும் சகோ. ஜோசப் மற்றும் **திருமதி. லாவண்யா ஜோசப்** அவர்கள் குடும்பத்தினர் பிரதிஷ்டை செய்தார்கள். அதோடு கூட ஷாலோம் ஊழியம் 23 ஆம் ஆண்டு நிறைவு ஸ்தோத்திரக் கூடுகையை ஆசரிக்க தேவன் கிருபைச் செய்தார். அந்த நாள் கூடுகையில் மூன்று மாநிலத்திலுள்ள ஷாலோம் ஸ்தாபனத்தின் மூத்த போதகர்கள் 100 பேர் குடும்பமாகவும், இராஜஸ்தான் ஊழியர்கள் குடும்பமாகவும் கலந்துக் கொண்டு கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள். ஜுலை 3 ஆம் தேதி குஜராத், மத்தியப்பிரதேச ஊழியர்கள் குடும்பமாக கூடி ஷாலோம் மிஷன் தினத்தைக் கொண்டாடினார்கள். ஊழியர்கள் யாவரும் ஆவியில் உற்சாகமடைந்து, விசேஷ ஊழியப்பாரத்தைப் பெற்று தேவனுக்காக பெரியக் காரியங்களைச் செய்யும்படியான தீர்மானத்தோடு சென்றார்கள்.

### 2. ஷாலோம் மிஷன் ஞாயிறு (Shalom Mission Sunday)

கடந்த அக்டோபர் 5,12,19 ஆகிய தேதிகளில் குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் முறையே Shalom Mission Sunday நடைபெற்றது. விசுவாசிகள் மிகவும் உற்சாகமாய் காணிக்கையைச் செலுத்தினார்கள். 2014 இல் அனைத்து சபைகளும் கொடுத்த

காணிக்கை மொத்தம் ரூ. 28 இலட்சம் ஆகும். சொந்த ஜனம் இயேசுவை அறிய வேண்டும் என்றும், ஷாலோம் ஊழியம் வளர்ந்து பெருக வேண்டும் என்றும், காணிக்கையைக் கொடுத்து தேவனை மகிமைப்படுத்தினார்கள். இதிலிருந்து இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் மூலம் கட்டப்படும் தேவனுடைய கூடாரத்தின் கட்டுமானப் பணிக்காக ரூ. 1 இலட்சம் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டது.

**3. ஷாலோம் அற்புதத்தின் நாள்** (Shalom Miracle Day)

2014 ஆம் ஆண்டில் செப்டம்பர் 26 ஆம் தேதியன்று ஷாலோம் அற்புதத்தின் நாள் நடைபெற்றது. எல்லா சபைகளிலும் தேவன் அற்புதங்களைச் செய்தார். மேலும் புதிய ஆத்துமாக்களும் பங்குப் பெற்று சுகம் பெற்றார்கள். **பிஷப். தேவதாஸ்** அவர்களும், **சகோதரி.** Dr. **வஹிதா தேவதாஸ்** அவர்களும் ஜெபித்து, ஜெப எண்ணெயை ஊழியர்களுக்குக் கொடுத்து அனுப்பினார்கள். ஊழியர்கள், வியாதியஸ்தர்கள் மீது எண்ணெய் பூசி ஜெபித்தார்கள். அந்த நாளில் சுமார் 5000 க்கும் அதிகமான அற்புதங்களைத் தேவன் செய்தார்.

**4. ஷாலோம் திருமண்டல நாள்** (Shalom Diocese Day)

கடந்த நவம்பர் 20 ஆம் தேதி ஷாலோம் திருமண்டல நாள் ஆகும். அன்று மத்தியப்பிரதேசத்திலுள்ள ஹக்வானி கிராமத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் **போதகர். ஜார்ஜ் ராபர்ட்** அவர்கள் தேவ செய்தியளிக்க **பேராயர். தேவதாஸ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். கூட்டத்தின் போது கூடியிருந்த போதகர்களும், மூப்பர்களும் விசுவாசிகளும் தேவன் தந்த திருமண்டலத்திற்காக நன்றி செலுத்தினார்கள்.

**5. சிறுவர் ஞாயிறு** (Children Sunday)

கடந்த மே மாதம் 18 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமையை அனைத்து சபைகளிலும் சிறுவர் ஞாயிறாகக் கொண்டாடினார்கள். இந்த நாளில் ஆரம்ப ஜெபம், ஆராதனை, வேத வாசிப்பு, செய்தி வேளை என முழு பொறுப்புகளையும் சிறுவர்களே ஏற்று நடத்தினார்கள். மேலும் மனப்பாட வசனங்கள், Action Songs குறு நாடகம் போன்றவைகளை நடத்திக் காட்டி பரவசப்படுத்தினார்கள்.

**6. அறுப்பின் பண்டிகை** (Harvest Festival)

கடந்த நவம்பர் மாதம் 3–ம் 4–ம் ஞாயிறுகளில் ஷாலோம் அறுப்பின் பண்டிகை கொண்டாடப்பட்டது. விசுவாசிகள் தங்கள் விளைவின் முதற்பலனிலிருந்து தசமபாகமாக, தானியங்களை உற்சாகமாக ஆலயத்திற்குக் காணிக்கையாகக் கொண்டு வந்து தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

## 7. புனித வெள்ளி & கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாள் (Good Friday & Easter Sunday)

லெந்து நாட்களில் சபை மக்கள் 40 நாட்கள் உபவாசம் இருந்து ஜெபித்தார்கள். பெரிய வியாழன் அன்று திருச்சபைகளில் நற்கருணை ஆராதனை நடைபெற்றது. புனித வெள்ளியன்று ஆலயத்திற்குச் சென்று இயேசுவின் பாடு மரணத்தைக் குறித்து தியானித்து இயேசுவின் உயிர்தெழுதலை உண்மையாய் உணர்ந்து மகிழ்ச்சியோடு கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளை எல்லா சபைகளிலும் கொண்டாடினார்கள்.

## 8. ஷாலோம் போதகர்கள் & சுதேச ஊழியர்கள் குடும்ப முகாம் (Shalom Family Conference)

2014 ஆம் ஆண்டில் ஷாலோம் சுதேச ஊழியர்கள் குடும்ப முகாம் குஜராத்தில் பரூச் பட்டணத்தில் உள்ள Spiritual Centre–ல் அக்டோபர் 27 முதல் 30 வரை மிக ஆசீர்வாதமாக நடைபெற்றது. ஊழியர்களும் ஊழியக்காரிகளும் சேர்ந்து சுமார் 1047 பேர்கள் பங்குப் பெற்றார்கள். இவர்களுக்கு உணவு, உறைவிடம் மற்றும் கூட்ட ஒழுங்குகள் சிறப்பாகச் செய்யப்பட்டது.

இம்முகாமில் **சகோ. மோகன் சி. லாசராஸ்** (இயேசு விடுவிக்கிறார் ஊழியம், நாாலுமாவடி) ஸ்தாபகர் அவர்கள், **போதகர். ஜான்ராஜ்** (உள்ளங்கையளவு மேகம் ஊழியங்கள், திருத்தங்கல்) மற்றும் இயேசு விடுவிக்கிறார் குழுவினர் **சகோ. சாம்சன், சகோ. ஜோசுவா** அவர்கள் சிறப்பு விருந்தினர்களாகவும், மும்பை பட்டணத்திலிருந்து **பாஸ்டர். டேனியல்** அவர்கள் ஆராதனை நடத்தும்படியாக 5 பேர்கொண்ட குழுவாகவும் வருகை தந்திருந்தார்கள். விருந்தினர்களுக்கு கலாச்சார வரவேற்பு கொடுக்கப்பட்டது.

இம்முகாமில் **சகே. மோகன் சி. லாசரஸ், போதகர். ஜான்ராஜ், போதகர். டேனியல் ராஜ்,** ஆகியோர் வல்லமையான தேவ செய்தியளித்தார்கள். **பேராயர். தேவதாஸ்** மற்றும் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** ஆகியோர் செய்திகளை மொழிபெயர்த்தனர்.

அப்போஸ்தலர் 2–ம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவர் அக்கினியாய் இறங்கியது போல இந்த நாட்களில் இறங்கியது ஒரு பின்மாரியாக இருந்தது. அனைவரும் ஒரு புதிய அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டார்கள். இறுதியில் அனைத்து ஊழியர் மற்றும் ஊழியக்காரிகளுக்கு தனித்தனியே **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களும் **போதகர். ஜான்ராஜ்** அவர்களும் விசேஷித்த ஜெபம் செய்தார்கள்.

இந்த முகாமில் சிறப்புப் பாடல்கள், Choreography, குறுநாடகங்கள் என தாகோத் பணித்தள அலுவலக ஊழியர்கள் மற்றும் மூன்று மாநிலங்களில் உள்ள ஊழியர்களின் குழுக்கள், பயிற்சி குழு ஊழியர்கள் பலரும் பங்கெடுத்து எல்லோரையும் மகிழ்வித்தார்கள். குறிப்பாக ஷாலோம் பயிற்சிக் குழுவின் மூலமாக **“பரம தரிசனம்”** என்ற தலைப்பில் வேதாகமத்திலுள்ள அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கையைப் பற்றியும், அவர் எப்படி புறஜாதியாருக்கு சுவிசேஷம் அறிவித்து, சபைகளை ஸ்தாபித்து, இயேசுவுக்காக பாடுகள் பட்டு, மரித்தார் என்பதையும்

குறுநாடகம் மூலமாக நடித்துக் காட்டியபோது ஆத்துமப் பாரத்தினால் நிரப்பப்பட்டார்கள். அனைவரும் கண்ணீர் சிந்தி, தங்களையும் ஜீவனுள்ள சாட்சியாக ஒப்புக்கொடுத்தார்கள். இந்த அனைத்து நிகழ்ச்சிகளையும் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களும் **சகோ. ஃப்ராங்க்ளின்** அவர்களும் ஒருங்கிணைந்து மிகவும் நேர்த்தியாய் நடத்திக் கொடுத்தார்கள். இந்த முகாமை சிறப்பாக நடத்துவதற்கு நிதி உதவி அளித்த இயேசு விடுவிக்கிறார் ஊழியங்களுக்காகவும் மற்றும் தேவ பிள்ளைகளுக்காகவும் தேவனைத் துதிக்கிறோம்.

## 9. சிறுவர்களின் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் (Children Christmas Celebration)

2014 ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாட்டம் டிசம்பர் 7 ஆம் தேதி அந்தர்வேலியா CDC சிறுவர்கள் மற்றும் CSP பெண்கள் மற்றும் சபையின் விசுவாசிகளுக்கும் நடத்தப்பட்டது. இதில் சுமார் 500 பேர் பங்குப் பெற்று மகிழ்ந்தார்கள். பிள்ளைகள் நிகழ்த்தின கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகளைப் பெற்றோர்கள் பார்த்து பரவசமடைந்தார்கள். **சகோ.டைட்டஸ்** அவர்கள் செய்தியளிக்க **சகோதரி.வஹிதா தேவதாஸ்** அவர்கள் மொழி பெயர்த்தார்கள்.

அதே போன்று டிசம்பர் 14 ஆம் தேதி ஜெரி கிராமத்திலுள்ள CDC சிறுவர்கள் மற்றும் சபையார் அனைவருக்கும் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. இதிலும் சுமார் 400 பேர் பங்கு பெற்று கிறிஸ்துவின் பிறப்பின் பண்டிகையைக் கொண்டாடினார்கள். இதே போல் டிசம்பர் 21 ஆம் தேதி குஜராத் ஹிரோலா கிராமத்திலுள்ள CDC சிறுவர்கள் மற்றும் CSP பெண்களுக்கும், சபை விசுவாசிகளுக்கும் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. இதில் சுமார் 500 பேருக்கும் மேலாக பங்குப் பெற்று ஆடிப் பாடி தேவனை மகிமைப்படுத்திக் கொண்டாடினார்கள். இந்நிகழ்ச்சிகளில் **சகோதரி.வஹிதா தேவதாஸ்** அவர்கள் கிறிஸ்துமஸ் சிறப்பு செய்தியளித்து ஜெபித்தார்கள்.

டிசம்பர் 16 ஆம் தேதி இராஜஸ்தான் பிஜல்பூரில் உள்ள நமது பள்ளி மற்றும் விடுதி மாணவர்களுக்கும் ஊழியக்காரர்களின் பிள்ளைகள் மற்றும் ஞாயிறுப் பள்ளி ஆசிரியர் மற்றும் சிறுவர்கள் யாவருக்கும் கிறிஸ்துமஸ் விழா பெரிய பந்தல் போட்டு நடத்தப்பட்டது. இதில் சுமார் 1000 பிள்ளைகள் பங்குப் பெற்றார்கள் இதில் **சகோதரி.வஹிதா தேவதாஸ்** அவர்கள் கிறிஸ்துமஸ் செய்தியளித்து ஜெபித்தார்கள்.

## 10. கிறிஸ்துமஸ் புத்தாடை வழங்குதல் (Christmas Dress Distribution)

நாம் தாங்கி வரும் பீல் ஆதிவாசிப் பிள்ளைகள் மற்றும் நமது ஊழியர்களின் பிள்ளைகள் 2487 பேருக்கும், Compassion என்ற திட்டத்தின் மூலம் தாங்கப்பட்டு வருகிற CDC பிள்ளைகள் 793 பேருக்கும், CSP திட்டத்தின் கீழ் பயன் பெற்று வரும் 88 பெண்களுக்கும் சேர்த்து மொத்தம் 3368 பேருக்கு புத்தாடைகள் வழங்கப்பட்டது. நமது ஷாலோம் ஊழியர்கள்

மற்றும் அலுவலக ஊழியர்கள் மொத்தம் 625 குடும்பத்திற்கும் கிறிஸ்துமஸ் புத்தாடைகள் வழங்கப்பட்டது. அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

### 11. கிறிஸ்துமஸ் கீத பவனி (Christmas Carol Rounds)

டிசம்பர் மாதம் முழுவதும் ஊழியர்கள் தங்கள் 600 சபைகளில் உள்ள விசுவாசிக் குடும்பங்களின் வீடுகளைச் சந்தித்து கீதப் பவனி சென்று கிறிஸ்துமஸ் பாடல்களை நடனத்துடன் ஆடிப்பாடி வாழ்த்துதல் கூறி தேவனை மகிமைப்படுத்தினது மட்டுமல்லாமல், புற இன நண்பர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபைச் செய்தார்.

### 12. கிறிஸ்துமஸ் ஆராதனை மற்றும் கொண்டாட்டம் (Christmas Service & Celeberation)

2014 டிசம்பர் கிறிஸ்துமஸ் தினமான 25 ஆம் தேதியன்று ஷாலோம் திருமண்டலத்தின் 600 சபைகளிலும் விசேஷ ஆராதனை மற்றும் கொண்டாட்டம் நடைபெற்றது. அந்தந்தக் கிராம சபை மக்கள் தங்கள் கிராமத்திலுள்ள, இயேசுவை அறியாதவர்களையும் அழைத்து, கிறிஸ்துமஸ் ஆராதனையில் பங்கெடுக்க வைத்தார்கள். எல்லா சபைகளும் நிறைந்து வழிந்தது. ஆலயத்திற்குள்ளே எத்தனைபேர் இருந்தார்களோ அதே அளவு மக்கள் ஆலயத்திற்கு வெளியேயும் இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆங்காங்கே நகர்புறங்களில் கூலி வேலைக்குச் சென்றிருந்தவர்கள் யாவரும் கிறிஸ்துமஸ் அன்று தங்கள் சபைகளுக்கு வந்து கொண்டாடினார்கள். அநேக இடங்களில் ஆலயத்தில் சாப்பாடு மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது. காலை 10 மணியில் இருந்து மாலை 5 மணி வரை கொண்டாடினார்கள். **பேராயர் தேவதாஸ்** அவர்கள் மத்தியப்பிரதேசத்தில் விசல்பூர் மற்றும் ரூப்பாகேடா ஆலயங்களிலும், இராஜஸ்தானில் கோப்கா பேராலயம் மற்றும் கும்புரா ஆலயங்களிலும் பங்குப் பெற்று சிறப்புச் செய்தியளித்து ஆசீர்வதித்து ஜெபித்தார்கள்.

## VII. செயல்திட்டங்கள் (Projects)

### 1. சபை ஒருங்கிணைப்பு (Church Network)

வளர்ந்து வரும் ஷாலோம் ஊழியத்தில் சபைகள், விசுவாசிகள், ஊழியர்கள் பெருகி வரவே இதையெல்லாம் ஒழுங்கும் கிரமமுமாய் ஒருங்கிணைத்துச் செயல்படுத்தும்படியாய் சபை ஒருங்கிணைப்புப் பணி நடைபெற்று வருகிறது.

### 2. சபை கட்டுமானப் பணி (Church Construction)

கடந்த ஆண்டில் 3 மாநிலங்களிலும் மொத்தம் 35 ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளது. இதில் 30 ஆலயங்கள் தேவ நாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதுவரை

ஷாலோம் ஊழியத்தின் மூலம் 300 ஆலயங்களைக் கட்டும்படியாகத் தேவன் கிருபைச் செய்தார். **தேவனுக்கே மகிமை!** இன்னும் 20 கிராம ஆலயங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 2015–ம் ஆண்டில் கர்த்தருக்குச் சித்தமானால் 100 ஆலயங்கள் கட்டப்பட ஜெபித்து வருகிறோம்.

## 3. பீல் ஆதிவாசி மாணவர் கல்விப்பணித் திட்டம் (Bhil Children Education Project)

குஜராத், மத்தியப்பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் ஆகிய மூன்று மாநிலங்களிலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பல்வேறு விசுவாசக் குடும்பங்கள் குறிப்பாக நம் சுதேச ஊழியர்களின் குடும்பங்களில் கல்வி கற்று வரும் பிள்ளைகளுக்காக சிறப்புத்திட்டங்கள் Shalom Charity Mission மூலமாகச் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் மூன்று மாநிலங்களில் ஊழியம் செய்யும் ஊழியர்களின் பிள்ளைகள் 648 மாணவர்களும், மூன்று மாநிலங்களிலுள்ள மூப்பர்களின் பிள்ளைகள் 218 பேர்களும், 3 மாநிலங்களிலும் உள்ள பள்ளி மற்றும் விடுதியில் பயிலும் மாணவர்கள் 327 பேர்களும் கல்வி பயின்று வருகிறார்கள். ஆக மொத்தம் 1193 பீல் ஆதிவாசி மாணவர்கள் தாங்கப்பட்டு வருகிறார்கள்.

இவர்கள், அருகே மற்றும் தொலைதூரங்களிலுள்ள நல்ல தரம் வாய்ந்த பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பப்பட்டு, ஆவிக்குரிய ஆசீர்வாதத்துடன் தரமான கல்வியறிவும் பெற்று வருகிறார்கள். இந்த 1193 மாணவர்களில் 907 மாணவர்களை ஜெபித்து மாதந்தோறும் ரூ. 600 கொடுத்துத் தாங்கும் ஆதரவாளர்கள் உள்ளனர். ஆனால், மீதமுள்ள 286 ஆதிவாசிப் பீல் மாணவர்களுக்காக ஜெபித்து மாதம் ரூ. 600 கொடுத்துத் தாங்கக்கூடிய ஆதரவாளர்கள் தேவை. இதுமட்டுமல்ல, குறிப்பாக சுமார் 150 மாணவர்கள் 10,11,12 மற்றும் கல்லூரிகளில் (TTC, Diploma, Nursing) படித்து வருவது குறிப்பிடத்தக்கது. மேற்படிப்பு படித்து வரும் சுமார் 150 மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

## 4. ஷாலோம் பள்ளி (Shalom Mission Middle School, Bijalpur, Raj)

கடந்த 13 வருடங்களாக பிஜல்பூரில் (இராஜஸ்தான்) நமது பள்ளிப் பணியை தேவன் ஆசீர்வதித்து வருகிறார். 8 ஆம் வகுப்பு வரை அரசு அங்கீகாரம் பெற்ற நமது பள்ளியில் சுமார் 325 பிள்ளைகள் கல்விப் பயின்று வருகிறார்கள். படிப்பு, விளையாட்டு, ஒழுக்கம் மற்றும் வேத அறிவில் முன்னேறி வருகிறார்கள். ஆசிரியர்களும் நன்கு அர்ப்பணிப்போடு தங்களின் பணியைச் செய்து வருகிறார்கள். இவர்களுக்கு ஞாயிறுப்பள்ளி ஒழுங்காக நடத்தப்பட்டு வருவதோடு தினமும் காலையில் வேதபாட தியானமும் நடைபெற்று வருகிறது. வருடத்திற்கு ஒரு முறை இந்தப் பிள்ளைகளுக்கு ஆவிக்குரிய முகாம் நடத்தப்படுகிறது. கடந்த ஆண்டு Sports Day Competitions மற்றும் ஆண்டு விழாவும் நடத்தப்பட்டது.

## 5. சிறுவர் முன்னேற்றப் பணி (Child Development Centre (CDC))

Compassion India மூலமாக நாம் நடத்தி வரும் CDC திட்டத்தில் குஜராத் ஹிரோலா கிராமத்தில் 251 பிள்ளைகளும், குஜராத் ஜெரி கிராமத்தில் 192 பிள்ளைகளும், மத்தியப்பிரதேசம் மாநிலத்தில் அந்தர்வேலியா கிராமத்தில் 350 பிள்ளைகளும் சேர்த்து மொத்தம் 793 பிள்ளைகள் கல்விப் பயின்று வருகிறார்கள். இவர்களுக்கு உணவு, உடை டியூசன் மற்றும் எல்லா உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த வருடத்தில் இந்தப் பிள்ளைகள் சுற்றுலாவிற்கு Indore waterfalls and Zoo அழைத்துச் செல்லப்பட்டார்கள். ஆசிரியர்களும், சபையின் மூப்பர்களும் இந்த சுற்றுலாவைப் பொறுப்பேற்று கவனித்தார்கள்.

## 6. Children Survival Programme (CSP)

Compassion India மூலமாக நாம் நடத்தி வரும் CSP திட்டத்தின் மூலம் குஜராத்தில் ஹிரோலா கிராமத்தில் 46 கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் 3 வயதுக்குட்பட்ட சிறு குழந்தைகளுக்கும் மத்தியப்பிரதேசம் அந்தர்வேலியா கிராமத்தில் 42 கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் 3 வயதுக்குட்பட்ட சிறு குழந்தைகளுக்கும் உடல் ஆரோக்கிய நலச்சேவை கொடுக்கப்பட்டு வருகிறது. அதாவது கருவிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கவும் பராமரிக்கவும் நல்ல ஆரோக்கியத்துடன் வளர்க்கப்படவும் தடுப்பூசி மற்றும் சத்து மாத்திரைகளும் சத்துணவுகளும் இந்தச் சேவை மூலமாக வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் முழு கிராமத்தில் உள்ள விசுவாசி மற்றும் விசுவாசியல்லாத கர்ப்பிணிப் பெண்களும் பயன் பெற்று வருகின்றனர். இதன் மூலம் பெண்களின் வாழ்வில் மறுமலர்ச்சிப் பெற்று அநேகப் பெண்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

## 7. சமுதாய மறுரூபமாக்கல் பயிற்சி (Institute of Community Transformation (ICT))

சேவா பாரத் ஸ்தாபனத்தின் மூலமாக கடந்த வருடம் குஜராத்தில் ஒரு திட்டமும், மத்தியப்பிரதேசத்தில் ஒரு திட்டமும், இராஜஸ்தானில் இரண்டு திட்டங்களும், மொத்தம் நான்கு ICT திட்டங்கள் கிடைக்கப் பெற்று 60 இளம் ஊழியர்கள் நல்ல பயிற்சியைப் பெற்றார்கள். இந்த நான்கு பயிற்சிகளையும் B.Th படித்த நம் ஷாலோம் போதகர்கள் இயக்குநர்களாகவும் மற்றும் ஆசிரியர்களாகவும் இருந்து மிகவும் சிறப்பாக நடத்திக் கொடுத்தார்கள். இதற்கு முன்பு பயிற்சிப் பெற்ற குஜராத் ICT மாணவர்களுக்கு தெல்சர்–ல் டிசம்பர் 10–ம் தேதியும், மத்தியப்பிரதேசம் ICT மாணவர்கள் 10 பேருக்கு போபாலிலும் பட்டமளிப்பு விழா நடைபெற்றுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இராஜஸ்தான் ICT மாணவர்கள் 10 பேருக்கு பேடவ் ஆலயத்தில் பட்டமளிப்பு விழா நடத்தப்பட்டு, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**8. குடி நீர் வசதித் திட்டம்** (Hand Pump)

CBN ஸ்தாபனத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும், பீல் மக்கள் வசிக்கும் கிராமங்களில் குடிநீர் மிகவும் தட்டுப்பாடுள்ள கிராமங்களில் ஆழ்குழாய் கிணறு மற்றும் Hand Pumps போடப்பட்டு குடி நீர் வசதி செய்து தரப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் மத்தியப்பிரதேசத்தில் 25 Hand Pumps மிகவும் உள்ளடங்கிய, வண்டிகள் கூட போக முடியாத பகுதிகளிலும் மிகுந்த சிரமத்தோடு கூட, சிறந்த முறையில் ஆழ்க்குழாய்கள் போட கர்த்தர் ஒத்தாசை அருளினார். எல்லா இடங்களிலும் நன்றாக தண்ணீர் கிடைக்கப் பெற்று, தேவனை மகிமைப்படுத்தினார்கள். இது வரை 250 க்கும் அதிகமான கிராமங்களில் குடி நீர் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டடுள்ளது.

**9. சிறப்பு ஆத்தும அறுவடைத் திட்டம்** (Special Soul Winning Project)

தெரிந்து கொள்ளப்பட்ட 48 ஊழியர்கள் குடும்பமாக ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் சுகமளிக்கும் கூட்டம் நடத்துகிறார்கள். ஒவ்வொரு மாதமும் 3 வெள்ளிக் கிழமைகளில் 16 இடங்கள் வீதம் 48 இடங்களில் கூட்டங்கள் நடைபெறுகிறது. தேவன் இந்த ஊழியர்களை வல்லமையாய் அற்புத அடையாளங்களுடன் பயன்படுத்தி வருகிறார். ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் புதிய ஆத்துமாக்கள் வந்து விடுதலையையும் சுகத்தையும் பெற்றுக் கொள்கிறார்கள். கடந்த 2014 ஆம் ஆண்டில் 543 கிராமங்களில் சுகமளிக்கும் கூட்டங்கள் நடைபெற்றது. இந்தக் கூட்டங்களில் பங்குப் பெற்றவர்கள், மொத்தம் 75953 பேர். இதன் விளைவாக 1961 புதிய குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். 7743 பேர் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுள்ளார்கள். 6709 அற்புத சாட்சிகளைத் தேவன் நடத்தியுள்ளார். நிச்சயம் 2015 க்குள் இக்கூட்டங்கள் மூலமாய் 10 இலட்சம் ஆத்துமாக்கள் தேவனண்டை வந்து விடுவார்கள் என்று முழு நிச்சயமாய் விசுவாசிக்கிறோம்.

2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் **சகோ. மோகன். சி. லாசரஸ்** அவர்கள் பணித்தளத்திற்கு வந்திருந்தபோது இந்தத் திட்டங்களுக்கென்று 4 TATA மேஜிக் வாகனங்களும், 4 Amplifier, 8 Speakers, 12 Mikes, 4 Still Cameras, 4 Generators **இயேசு விடுவிக்கிறார் ஸ்தாபனத்தின்** மூலமாக ஜெபித்து வழங்கப்பட்டது. இந்த ஆண்டிலும் **சகோ. சாம் ஜெபராஜ், சகோ. ஜெபசிங் மற்றும் சகோ. ரூபன்** அவர்கள் பணித்தளத்திற்கு வருகை தந்து இந்தத் திட்டங்களுக்கென்று 4 TATA மேஜிக் வாகனங்களும், 4 Amplifier, 8 Speakers, 12 Mikes, 4 Still Cameras, 4 Generators வழங்கப்பட்டது. இதைக் கொண்டு கடந்த ஆண்டு ஊழியம் நிறைவேற்றப்பட்டது. அற்புதங்கள் ஏராளமாய் நடந்தன. குறிப்பாக மரித்தவர்களைத் தேவன் உயிரோடே எழுப்பினார். **இன்றும் இயேசு ஜீவிக்கிறார். அல்லேலூயா!**

**10. ஒலி நாடாக்கள் & பாடல் புத்தக வெளியீடு** (Publication of CD & Song Book)

கடந்த 2014 ஆம் ஆண்டில் பாடல்கள் அடங்கிய 2 ஆடியோ C.D. க்கள் வெளியிடும்படியாய் ஆண்டவர் கிருபைக் கொடுத்தார். சிறுவர்களுக்கென்று C.B.C. பாடல்கள் **"ஜெபமே ஜெயம்"** என்ற தலைப்பிலும் மற்றும் கிறிஸ்மஸ் பாடல்கள் அடங்கிய சிறப்பு C.D. **"Aaya Masiha"** வெளியிடப்பட்டது.

**11. விசுவாசக் குடும்பங்களுக்கு வேதாகமம் வழங்குதல்** (Bible Project)

ஒவ்வொரு வருடமும் குஜராத் வேதாகமச் சங்கத்திலிருந்து வேதாகமம் அதிகமாய் விநியோகித்த ஸ்தாபனத்திற்கு விருது கொடுக்கப்படும். ஒவ்வொரு வருடமும் ஷாலோம் ஊழியத்திற்கு அந்த விருது கிடைப்பது மிக சந்தோஷமான காரியம். 2014 இல் சுமார் 4000 வேதாகமங்களுக்கு மேலாக வாங்கி விசுவாசிகளுக்கு விநியோகிக்கப்பட்டது. ஆகையால் கடந்த வருடமும் வேதாகமச் சங்கத்திலிருந்து இந்த விருது நமக்கு கிடைக்கப்பட்டுள்ளது.

**12. இலக்கியம்** (Literature Project)

கடந்த ஆண்டு 670 சபைகளுக்கும் சபை விசுவாசிகளுக்கும் வேதாகமங்கள், ஆவிக்குரியப் புத்தகங்கள், ஆடியோ வீடியோ சிடி மற்றும் ஆலயத்திற்குத் தேவையான பொருட்கள் மற்றும் கிறிஸ்துமஸ் அலங்காரப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டது.

**13. கன்வென்ஷன் கூட்டங்கள்** (Convention meetings)

நவம்பர் 13–ம் தேதியன்று காளாகேத் கிராமத்தில் ஷாலோம் கன்வென்ஷன் கூட்டம் நடைபெற்றது. இதில் சகோ. R.D.சுந்தர்சிங் (நெய்யாற்றங்கரை, திருவனந்தபுரம்) அவர்கள் செய்தியளித்தார்கள். நவம்பர் 18–ம் தேதியன்று குஜராத் நகராலா கிராமத்திலும் 20–ம் தேதி மத்தியப்பிரதேசத்திலுள்ள ஹக்வானி கிராமத்திலும் கன்வென்ஷன் கூட்டம் நடைபெற்றது. இதில் போதகர்.ஜார்ஜ் ராபர்ட் (சென்னை) அவர்கள் தேவ செய்தியளித்தார்கள். நவம்பர் 21–ம் தேதியன்று மத்தியப்பிரதேசத்திலுள்ள முன்டத் கிராமத்தில் நடைபெற்ற கன்வென்ஷன் கூட்டத்தில் சகோ.ஸ்டீபன்(சென்னை) அவர்கள் செய்தியளித்தார்கள். இக்கூட்டங்களில் சுமார் 7000 பேர் பங்கு பெற்று, விடுதலையையும், ஆசீர்வாதத்தையும் பெற்றார்கள்.

**14. மிஷனெரி பிரதிஷ்டைகள்** (Missionary Dedication)

தேவனுடைய பெரிதான கிருபையினால் குஜராத், இராஜஸ்தான் மற்றும் மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலுமுள்ள நமது ஷாலோம் பணித்தளங்களிலிருந்து கடந்த 2014 ஆம் ஆண்டு மொத்தம் 23 ஷாலோம் சுதேச ஊழியர்கள் தமிழ்நாட்டிற்கு வரவழைக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டு, புதிய அர்ப்பணிப்புடனும் தரிசனங்களுடனும் திரும்பிச் சென்று ஊழியம் செய்து வருகின்றனர். அவர்களை ஜெபித்துத் தாங்கவும், பிரதிஷ்டை செய்யவும் முன்வந்த சபைகள், போதகர்கள், ஜெபக் குழுக்கள் மற்றும் குடும்பத்தார் அனைவருக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

## 2014-ல் பணித்தளத்திற்கு வருகை தந்தவர்கள்

| எண் | மாதம் / தேதி | பெயர் | ஊர் | விபரம் |
|---|---|---|---|---|
| 1 | ஜன 17–19 | Pr. ஜோசுவா ஸ்டீபன் & குடும்பம் | வேலூர் | பணித்தளப்பார்வை & சிறப்புக் கூட்டங்கள், வேதாகமம் வழங்குதல் |
| 2 | பிப். 7–9 | Pr. ஜாண் காபிரியேல் & குழுவினர் | மும்பை | பணித்தளப்பார்வை & சிறப்புக் கூட்டங்கள் |
| 3 | பிப். 18–20 | Pr. ஜோசப் ததேயுஸ் & குடும்பம் | சென்னை | பணித்தளப்பார்வை & சிறப்புக் கூட்டங்கள் |
| 4 | மார்ச் 1–3 | சகோ. சாமுவேல் & திருமதி. பொன்சீலி சாமுவேல் குடும்பம் (இம்மானுவேல் ஜெப வீடு), திரு. | இடையன்விளை | காளாக்கூட் (ம.பி) ஆலயப்பிரதிஷ்டை, பணித்தளப்பார்வை & சிறப்புக் கூட்டங்கள் |
| 5 | மார்ச் 6–9 | Pr.ஜோசப் பாலசந்திரன் & குடும்பம் (நல்ல சமாரியன் சபை) | மதுரை | பரோடு & பாண்டாக்காப்பர் (ம.பி) ஆலயப் பிரதிஷ்டை, பணித்தளப்பார்வை & சிறப்புக் கூட்டங்கள் |
| 6 | மார்ச் 21–23 | சகோ. ஜெயச்சந்திரன் & குடும்பம் | மும்பை | கர்வானி (குஜ.) ஆலயப் பிரதிஷ்டை & பணித்தளப்பார்வை & சிறப்புக் கூட்டங்கள் |
| 7 | மார்ச் 21–23 | இயேசுவின் கரங்கள் ஜெப ஐக்கியம் (விமான நிலைய ஊழியர் ஐக்கியம்) | சென்னை | பணித்தளப்பார்வை & சிறப்புக் கூட்டங்கள் |
| 8 | ஜுலை 1–3 | Prof.C.S கிறிஸ்டோபர்& குடும்பம், திருமதி. லாவண்யா ஜோசப் குடும்பத்தினர் | பாளையங்கோட்டை | கோய்கா பேராலயம், அம்ளிப்பாடா, பாடி லசோடி ஆலயங்கள் பிரதிஷ்டை |
| | | டாக்டர். பிரேமா கிறிஸ்டோபர் | பாளையங்கோட்டை | ஷாலோம் சிறப்பு மருத்துவ முகாம் |
| 9 | ஜுலை 7–9 | சகோ.ஸ்டீபன் | குளத்துக்குடியிருப்பு | படுவேல் ஆலயப்பிரதிஷ்டை, பணித்தளப்பார்வை & சிறப்புக் கூட்டங்கள் |
| 10 | ஜுலை 7–9 | சகோ. ஜீவி ஜெபராஜ் (குஜராத் பணித்தள ஊழியப் பயிற்சி) | சென்னை | சிறப்பு மூப்பர்கள் கூடுகை |
| 11 | ஜுலை 12–13 | சகோ. ஜஸ்டஸ் (இயேசு விடுவிக்கிறார் ஆதரவாளர்) | திருநெல்வேலி | தன்புரி(ம.பி) & நெல்சூர் (குஜ) ஆலயப்பிரதிஷ்டை & பணித்தளப்பார்வை |
| 12 | ஜுலை 12–13 | சகோ. ஜாண் டேவிட் | சென்னை | பணித்தளப்பார்வை & சிறப்புக் கூட்டங்கள் |
| 13 | ஆக. 5–7 | சகோ. சாம் ஜெபராஜ், சகோ. ஜெபசிங், சகோ. ரூபன் (இயேசு விடுவிக்கிறார்) | நாலுமாவடி | ஜெப முகாம்கள் & 4 Tata Magic Vehicle, 4Set PA System, 4 Generators, 4 Cameras பிரதிஷ்டை |
| 14 | ஆக. 30,31 செப்–1 | சகோதரி. ரமோலா பாபு | நாகர்கோவில் | பணித்தளப்பார்வை & சிறப்புக் கூட்டங்கள், வேதாகமம் வழங்குதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | அக். 1–3 | சகோ. மோகன் ராஜ் & குடும்பம் ஷாலோம் முன்னேற்றப் பணி சிறப்பு பணித்தளப் பார்வை | சென்னை | பணித்தளப்பார்வை & சிறப்புக் கூட்டங்கள் |
| 16 | அக். 6–8 | Rev. Dr. V. David, Chairman of St.Paul's Hr.Sec.School. | கோயம்புத்தூர் | பணித்தளப்பார்வை & சிறப்புக் கூட்டங்கள் |
| 17 | அக். 11–12 | கிறிஸ்துவின் நண்பர்கள் குழு | மும்பை | பணித்தளப்பார்வை & சிறப்புக் கூட்டங்கள் |
| 18 | நவ. 12–16 | சகோ. R.D.சுந்தர்சிங் & குடும்பம் Jesus Ministries | நெய்யாற்றங்கரை | போர்குன்டா(இராஜ), காக்கராடுங்கரா(இராஜ), சரேல் (ம.பி), சஜேலி(ம.பி) ஆலயப்பிரதிஷ்டை & பணித்தளப்பார்வை & சிறப்புக் கூட்டங்கள் |
| 19 | நவ. 17 | சகோ. ஜெயசிங் (D.S Group) குடும்பத்தார் 8 பேர்கள் | சென்னை | பணித்தளப்பார்வை & சிறப்புக் கூட்டங்கள் |
| 20 | நவ. 18–20 | Pr.ஜார்ஜ் ராபர்ட் & குடும்பம் (Praise Tower City Church) | சென்னை | பிப்லிப்பாடா (ம.பி), சாகுவா(இராஜ) ஆலயப்பிரதிஷ்டை & பணித்தளப்பார்வை & சிறப்புக் கூட்டங்கள் |
| 21 | நவ. 21–23 | சகோ. ஸ்டீபன் & குடும்பம் (தேவ அன்பின் ஊழியம்) | சென்னை | ஃபுலேடி (ம.பி) ஆலயப்பிரதிஷ்டை & பணித்தளப்பார்வை & சிறப்புக் கூட்டங்கள் |
| 22 | நவ.23 | சகோ.டேவிட் S/o (Mr.லாமேக்கு) இயேசு விடுவிக்கிறார் ஆதரவாளர் | கோயம்புத்தூர் | டுங்கர்பீத் (இராஜ) ஆலயப்பிரதிஷ்டை & பணித்தளப்பார்வை |
| 23 | நவ. 28– டிச.2 | Pr.ஜாண் சகின் (பரிசுத்த ஆவியானவரின் அக்கினி அபிஷேக ஊழியங்கள்) & சகோ. ஜாண் விக்டர் | வேர்க்கிளம்பி | பணித்தளப்பார்வை & சிறப்புக் கூட்டங்கள் & வேதாகம் வழங்குதல் |
| 24 | டிச. 1–2 | சகோ. சாமுவேல் நடராஜன் & குடும்பம் | துபாய் | பாடல்வா, வால்பூர் (ம.பி) & ஜாம்லா (குஜ) ஆலயப்பிரதிஷ்டை, சிறப்புக் கூட்டங்கள். |
| 25 | டிச. 1–8 | சகோ. ரெக்ஸ், சகோ.ஜோசுவா, சகோ. ப்ரவீன் (இயேசு விடுவிக்கிறார்) | நாலுமாவடி | Transformation Video Documentary |
| 26 | டிச. 6–7 | சகோ. ஜெயச்சந்திரன் & குடும்பம், சகோ. ஜாண் & குடும்பம் | மும்பை | பணித்தளப்பார்வை & சிறப்புக் கூட்டங்கள், வேதாகம் வழங்குதல் |
| 27 | டிச. 20–21 | சகோ. ஜெபராஜ் & குடும்பம் | மும்பை | பேருகட் (ம.பி) ஆலயப்பிரதிஷ்டை, பணித்தளப்பார்வை & சிறப்புக் கூட்டங்கள் |

சுதேச ஊழியரின் சாட்சி

# போதகர். நவல் புரியா

### சாலப்பாடா, குஜராத்




இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். எனது பெயர் நவல் புரியா. நான் குஜராத்தில் தாகோத் மாவட்டத்தில் அமைந்துள்ள சாலப்பாடா கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. இயேசுவை அறியாததற்கு முன் நான் சாராயம் காய்ச்சும் தொழிலை செய்து வந்தேன். மேலும் உலகப்பிரகாரமான பாவத்திலும் அந்தகாரத்திலும் வாழ்ந்து வந்தேன். எனது தாயார் 15 வருடங்களாக பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டு மிகவும் கஷ்டப்பட்டார்கள். அவர்களின் விடுதலைக்காக எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. சுமார் ரூ. 6 இலட்சம் வரை செலவு செய்தும் எனது தாயாருக்கு விடுதலை கிடைக்கவில்லை.

இந்தச் சூழ்நிலையில் மத்தியப்பிரதேசத்திலுள்ள விசல்பூர் ஷாலோம் சபையின் மூப்பர் சிமளியாபாய் என்பவர் இயேசுவைப் பற்றிக் கூறினார். இயேசுவை விசுவாசித்தால் பாவத்திலி–ருந்தும் பிசாசின் பிடியிலிருந்தும் விடுதலை கிடைக்கும் என்று கூறினார். அதைக் கேள்விப்பட்டு, விசல்பூர் சபைக்கு எனது தாயாரை அழைத்துச் சென்றோம். அங்கு போதகர். மத்தூர் புரியா அவர்கள் எனது தாயாருக்காக ஜெபித்தபோது தேவன் விடுதலைக் கொடுத்தார். அந்த அற்புதத்தின் மூலம் நானும் எனது பாவங்களை அறிக்கையிட்டு மனந்திரும்பினேன். 1996–ம் வருடம் நாங்கள் குடும்பமாக இயேசுவை எங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டோம். அதன் பின் தொடர்ந்து ஷாலோம் விசல்பூர் சபைக்கு சென்று ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்தேன். 2000–ம் வருடத்தில் நான் ஞானஸ்நானம் பெற்றேன். 2008–ம் வருடத்தில் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றேன்.

பின்பு ஊழியம் செய்ய வேண்டுமென்ற பாரம் ஏற்பட்டு, 2009–ம் ஆண்டு ஷாலோம் ஊழியத்தில் இணைந்து, 1 மாத ஊழியப் பயிற்சி பெற்றேன். தற்போது எனது சொந்த கிராமமாகிய சாலாப்பாடாவில் ஊழியம் செய்து வருகிறேன். 2011–ம் ஆண்டு I.C.T பயிற்சி முடிக்க தேவன் கிருபை செய்தார். தற்போது 42 குடும்பங்கள் சாலப்பாடா கிராம சபையில் ஆராதித்து வருகிறார்கள். 2020–க்குள் எனது கிராமம் முழுவதும் இரட்சிக்கப்பட வேண்டும் மற்றும் 15 கிளை சபைகளை உருவாக்க வேண்டும் என்ற தரிசனத்துடன் குடும்பமாக ஊழியம் செய்து வருகிறோம். தேவனுக்கே மகிமை!

இந்த சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்குவோர் : **Mrs. மல்லிகா விஜயக்குமார்,** Marthandam

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இதுவரையில் 500 க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களை எழுப்பி, பயிற்றுவித்து 600 க்கும் அதிகமான ஸ்தல சபைகளை உருவாக்கியுள்ளோம். இவ்வருடத்தில் 200 புதிய சுதேச ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தருகிறார். குடும்பமாக, சபையாக, குழுவாக மாதம் ரூ. 2500/– ஜெபித்துக் கொடுத்துத் தாங்க முன் வாருங்கள். பாரதமெங்கும் வீட்டிற்கு ஒரு நற்செய்திப் பணியாளரைத் தாங்குவோம். தேசம் தேவனை அறியட்டும்! அல்லேலூயா!

# சகோ. ஸ்டாலின் அவர்களின் பணித்தள வருகை

**Holy Ghost Glorious Fire Revival Ministries, சென்னை**



உபேராவ் (ம.பி.) கிராம ஆலய பிரதிஷ்டை



கலாச்சார வரவேற்பு



தேவ செய்தியளிக்கும் சகோ. ஸ்டாலின் அவர்கள்



உபேராவ் கிராம ஆலயத்தில் கூடியிருந்த விசுவாசிகள்



கங்கேலா (குஜராத்) கிராம ஆலயம் – செய்திவேளை



விசுவாசிகளுக்கு வேதாகமங்கள் வழங்குதல்



தெமோரா (ம.பி.) கிராம ஆலயத்திற்கு முன்பு



அந்தர்வேலியா (ம.பி.) ஆலய ஆராதனையில்

## சகோ. ஸ்டாலின் மற்றும் குழுவினர் பணித்தள பார்வை அறிக்கை

### Holy Ghost Glorious Fire Revival Ministries, Chennai

கர்த்தருடைய கிருபையினால் ஜனவரி மாதம் 17 மற்றும் 18–ம் தேதிகளில் ஷாலோம் பணித்தளத்தை பார்வையிட எங்கள் ஊழிய ஐக்கியத்தின் சார்பில் நானும், **சகோ. ராஜ்குமார் சாமுவேல்** மற்றும் **சகோ. விஜு** அவர்களும் சென்றிருந்தோம். அங்கு பணித்தளங்களைப் பார்வையிடவும் ஊழியங்களை நிறைவேற்றவும் தேவன் உதவி செய்தார். 17–ம் தேதியன்று **சகோ. சாமுவேல்** அவர்களுடன் குஜராத்திலுள்ள தெல்சர், போரடி, தனசியா ஆகிய கிராம ஆலயங்களைப் பார்வையிட்டோம். அதைத் தொடர்ந்து ஜெரி கிராம ஆலயத்தையும் அங்கு நடக்கும் compassion CDC project –யும், சிறுவர்களையும் பார்வையிட்டோம். அதைத் தொடர்ந்து கங்கேலா கிராம ஆலயத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சிறப்புக் கூட்டத்திலும் பங்கு பெற்றோம். அங்கு ஆராதனை வேளையில் கர்த்தருடைய பிரசன்னம் இறங்கியதை நன்றாக உணர முடிந்தது. அங்கு ரூ.10,000 மதிப்பில் 70 குஜராத்தி வேதாகமங்களை விசுவாசிகளுக்கு கொடுக்க தேவன் கிருபை செய்தார். செய்தியின் மூலம் கலந்துக் கொண்ட அனைவரும் ஆசீர்வதிக்கப்பட்டனர். கூட்டம் ஆசீர்வாதமாக இருந்தது. அதைத் தொடர்ந்து கர்பாடா தாலுகாவிலுள்ள சிமளியா ஆலயத்தையும் ஊழியர் குடும்பத்தையும் சந்தித்தோம். பின்பு பாட்டன்புரா கிராம ஆலயத்தைப் பார்வையிட்டோம். அங்கு **ஊழியர். மங்கு புரியா** அவர்களின் சாட்சியைக் கேட்டோம். மிக ஆச்சரியமாய் இருந்தது.

18–ம் தேதியன்று **சகோ. சாமுவேல்** அவர்களுடன் மத்தியப்பிரதேசத்திலுள்ள டெமேரா, ரூப்பாக்கேடா, அந்தர்வேலியா, நெகடியா, மேந்திக்கேடா, பிட்டோல் ஆகிய ஆலயங்களைப் பார்வையிட்டோம். அனைத்து ஆலயங்களிலும் ஞாயிறு ஆராதனை நடைபெற்றுக் கொண்டிருந்தது. நாங்கள் வருவது கூட தெரியாமல் மக்கள் தேவனை மெய் மறந்து ஆராதித்து கொண்டிருந்ததைப் பார்த்த போது எங்களுக்கே ஆச்சரியமாக இருந்தது. அதைத் தொடர்ந்து ராணாப்பூர் தாலுகாவில், எங்கள் ஜெபக்குழுவின் சார்பில் கொடுக்கப்பட்ட ரூ. 2 இலட்சம் நிதியுதவியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள உபேராவ் கிராம ஆலயப் பிரதிஷ்டை ஆராதனையில் கலந்துக் கொண்டோம். **பேராயர். தேவதாஸ்** அவர்கள் முன்னிலையில் புதிய ஆலயத்தை தேவ நாம மகிமைக்காக ஜெபித்து பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை செய்தார். ஜனங்கள் உற்சாகமாக சிறு பிள்ளைகள் முதற்கொண்டு பெரியோர் வரை அனைவரும் ஆனந்தமாய் புதிய ஆலயத்தில் நடனமாடி தேவனைத் துதித்து ஆராதித்தார்கள். பின்பு நான் தேவ செய்தியளிக்க **பேராயர். தேவதாஸ்** அவர்கள் மொழி பெயர்த்தார்கள். கலந்துக் கொண்ட அனைவருக்கும் தனித்தனியே நானும் பேராயரும் ஜெபித்தோம். தேவன் ஆலயப் பிரதிஷ்டை ஆராதனையை ஆசீர்வதித்தார். தொடர்ந்து பாடல்வா மற்றும் டிக்கிடி ஆலயங்களையும் ஊழியர் குடும்பத்தையும் சந்தித்து ஜெபித்தோம். பணித்தளப்பார்வை மிக ஆசீர்வாதமாக இருந்தது.

**மனம் திறந்து பணித்தளத்தைப் பற்றி:**

- இந்தக் கிராமங்களில் எந்தவித போக்குவரத்து மற்றும் மருத்துவ வசதி இல்லாமல் காணப்படுகிறது.
- குடிகாரர்கள், திருடர்கள், மந்திரவாதிகளாக இருந்தவர்கள் இன்று இயேசுவை ஏற்றுக் கொண்டு விசுவாசிகளாகவும், ஊழியர்களாகவும் இருப்பது ஆச்சரியமாக இருக்கிறது.
- இவர்கள் ஆராதிக்கும் ஆராதனையில் தேவ பிரசன்னத்தை அதிகமாக உணர்ந்தோம்.
- இயேசு இந்த ஜனங்களை எவ்வளவாய் நேசிக்கிறார் என்பதையும், இந்த மக்கள் எவ்வளவாய் இயேசுவை நேசிக்கிறார்கள் என்பதையும் இவர்கள் இயேசுவின் அன்பை நினைத்து கண்ணீரோடு ஆராதிப்பதின் மூலம் நன்றாக அறிய முடிந்தது.
- மக்காச்சோள ரொட்டியும் கோழிக் குழம்பும் சமைத்துக் கொடுத்து மிக அன்புடன் எங்களை உபசரித்தது மறக்க முடியாது.
- இந்த 2 நாட்களில் சுமார் 16 பணித்தளங்களையும் ஊழியங்களையும் விசுவாசிகளையும் பார்த்த போது பாரத தேசத்தில் இப்படியும் ஒரு எழுப்புதல் ஊழியம் இருக்கிறது என்பதை நினைத்து தேவனைத் துதித்தோம்.
- ஆலய ஆராதனையில் பீல் போதகர்கள் மற்றும் அவர்களின் மனைவிமார்கள் நடத்தும் ஜெபம் இடத்தை அசைக்கக் கூடிய யுத்த ஜெபமாகக் கண்டோம்.
- எழுதப் படிக்க தெரியாவிட்டாலும், இவர்கள் வேதத்தை நேசித்து அரவணைத்து வைத்து கொள்ளும் காட்சி மறக்க முடியாதது.
- கிராம ஆலயத்திற்கு நாங்கள் கொடுத்த காணிக்கை ரூ.2 இலட்சம். இதை நல்ல நிலத்தில் விதைத்ததைக் குறித்து நாங்கள் மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.
- இந்த எழுப்புதல் பணிக்கு ஆரம்ப நாட்களில் **பேராயர். தேவதாஸ்** அவர்களின் குடும்பம் கடந்து வந்த பாதைகளை நினைத்து கண்ணீரோடு தேவனுக்கு நன்றி செலுத்தினோம்.

இதை வாசிக்கும் அன்பர்களே! பீல் மக்கள் மத்தியில் நடைபெறும் எழுப்புதல் பணியை பணித்தளத்திற்கு வந்து பாருங்கள். இந்த ஊழியங்களுக்காக ஜெபிக்கவும் தாங்கவும், ஆலயங்கள் கட்டித்தரவும் முன் வாருங்கள். இந்த ஊழியத்திற்காக நீங்கள் விதைக்கும் பலனை கண்டிப்பாக தேவன் பல மடங்காக உங்கள் வாழ்வில் தருவார். **தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

**சகோ. ஸ்டாலின்**
**Holy Ghost Glorious Fire Revival Ministries**

---

**தேவனைத் துதிக்கிறோம்**

தேவனுடைய பெரிதான கிருபையினால் **26.12.2014** அன்று மாலை பொன்னப்பநகர் CSI தேவாலயத்தில் வைத்து ஆலய ஜெபக்குழு மூலமாக நடைபெற்றக் கூட்டத்தில் நமது ஷாலோம் மார்த்தாண்டம் பகுதி முன்னேற்றப் பணியாளர் **சகோ. செல்வதுரை** அவர்கள் கலந்துக் கொண்டு, ஷாலோம் ஊழியங்களைக் குறித்து கூறி தேவ செய்தியளித்தார்கள். இந்த வாய்ப்பினை ஷாலோம் ஊழியங்களுக்குக் கொடுத்த **Pr. J.R. ராபின்சன்** அவர்களுக்காகவும் சபையின் ஜெபக் குழுவிற்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

## குஜராத் பணித்தள அலுவலகத்திற்கு... ஊழியர்கள் தேவை...

***தேவ கிருபையினால் கடந்த 23 ஆண்டுகளில் நம் ஷாலோம் ஊழியங்கள் விரைவாக வளர்ந்து வருகிறது. ஆகவே குஜராத் பணித்தள அலுவலகத்தில் பணிபுரிய நமக்கு ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள்.***

1. Accounts Department –ல் பணிபுரிய
2. Communication Department –ல் பணிபுரிய. (Tamil & English Typing தெரிந்த)
3. Magazine Department –ல் பணிபுரிய. (Tamil & English Typing தெரிந்த)

இந்தப் பணிகளைச் செய்ய ஊழியர்கள் (சகோதரர்கள், சகோதரிகள்) நமக்கு உடனடியாக தேவைப்படுகிறார்கள். ஆகவே ஊழியத்திற்கு அர்ப்பணித்து, ஊழிய வாஞ்சை உள்ளவர்கள் இருப்பீர்களானால் எங்களோடு தொடர்பு கொண்டு உங்களது Bio-Data வை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். மேலும் தூத்துக்குடி அலுவலக மேலாளர் சகோ. சாம் குணசீலன் அவர்களோடு தொடர்பு கொள்ளலாம். **செல் போன் : 9345675468**

**"அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம்." மத்தேயு 9:37**

## முக்கிய அறிவிப்பு

***கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!***

நமது ஷாலோம் ஊழியத்தில் நாகர்கோவில் கிளை அலுவலகத்தில் முன்னேற்றப் பணியாளராக கடந்த ஒரு ஆண்டு காலமாக ஊழியம் செய்து வந்த **சகோ. ஜாண் ஸ்ரீதர்** அவர்கள் நம் ஷாலோம் ஊழியத்திலிருந்து கடந்த ஜனவரி 1ம் தேதி முதல் விலகிக் கொண்டார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆகவே ஷாலோம் ஊழியத்தின் தொடர்பாக காணிக்கை கொடுக்க அவருடன் தொடர்பு கொள்ள வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் ஆதரவாளர்கள் ஷாலோம் நாகர்கோவில் கிளை அலுவலகத்திற்கு நேரில் வந்து தாங்கள் காணிக்கைகளைக் கொடுத்து ஜெபித்துச் செல்லலாம். தொடர்புக்கு : 9698444522

## அறிவிப்பு

கடந்த ஜனவரி – 2015 அன்பு பகிர்வு இயக்கம் மாத இதழில் 12 மற்றும் 13 பக்கங்களில் வெளியிடப்பட்டிருந்த பணித்தள வருகை புகைப்படங்கள் மற்றும் அறிக்கையில் **சகோ. ஜாண் விக்டர்** என வெளியிடுவதற்குப் பதிலாக **சகோ. ஜான் நெல்சன்** என தவறுதலாக வெளியிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிக்கிறோம்.

## அறிவிப்பு

அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலரில் வெளியாகும் வேத வினா விடை போட்டி இந்த இதழில் வெளியிட இயலவில்லை. அடுத்த இதழில் வெளியாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# ஷாலோம் கிளை அலுவலகங்களின் முகவரிகள்

**HEAD OFFICE**

**M/S. SHARING LOVE MISSION,**

New No. 5A/323, Old No. 5/168,-3rd Street, Caldwell Colony,
TUTICORIN-628008 Ph. : 2377737, 2375468, Cell : 9345675468

| | |
|---|---|
| **CHENNAI BRANCH OFFICE**<br>**Bro. John Jeyasingh**<br>No.102-2nd Main Road<br>Sathya Nagar, Padi,<br>CHENNAI - 600050.<br>Cell : 9698244577 | **MARTHANDAM BRANCH OFFICE**<br>**Bro. Selvadurai.G**<br>Bethel,<br>25-7/A 1-Block 25, Paruthivilai,<br>Kannakode, Marthandam - 629165<br>Cell : 9487689869 |
| **MUMBAI BRANCH OFFICE**<br>**Bro. Prabhakaran. P.**<br>C/o. Mr. P.Immanuel,<br>C-2, Plot No.123-Old Mhada Colony,<br>Mangalya Co.Op.Society Ltd,<br>Pokharan Road No.2,<br>Thane West - 400610<br>Cell : 9768282699 | **NAGERCOIL BRANCH OFFICE**<br>SHARING LOVE MISSION Branch<br>Ebenezer Plaza, Parama Street,<br>WCC Junction,<br>Nagercoil - 629001<br>Cell : 9698444522 |
| **MADURAI BRANCH OFFICE**<br>**Bro. Chandra Paul. S**<br>6/3, Nellaiappar Puram 7th Street,<br>Tirunagar (p.o)<br>MADURAI-625006<br>Cell : 9698644522 | **TIRUNELVELI BRANCH OFFICE**<br>**Bro. David. R**<br>56 A/4,-C.S.I Church South Street,<br>(Upstairs) STC road,<br>Perumalpuram, Palayamkottai<br>TIRUNELVELI-627007<br>Cell 9698844599 |

**குழந்தை ஆதரவுத் தொகை மற்றும் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப...**

வங்கிக் கணக்கின் பெயர் : **SHALOM CHARITY MISSION**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**

**174100710400061**
**Branch : Tiruchendur Road**
(IFS Code : TMBL0000174)

**AXIS BANK**

**105010100096779 -**
(IFS Code : UTIB0000105)

## காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- ❖ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்துக் கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ❖ காணிக்கைகளை **E.M.O.** மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அப்படி அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியைக் கொடுக்கும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- ❖ **SHARING LOVE MISSION** என்ற பெயருக்கு **D.D.** அல்லது **Cheque** எடுத்து தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு பதிவுத் தபால் அல்லது கொரியர் மூலமாக உங்கள் காணிக்கைகளை அனுப்பலாம்.
- ❖ உங்களது வங்கிக் கணக்கிலிருந்து, **Net Transfer** மூலமாகவும் காணிக்கைகளை கீழ்க்கண்ட எங்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பலாம்.
- ❖ நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க்கண்ட வங்கிகளில் எங்கள் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலம் **Deposit** பண்ணலாம்.
- ❖ எங்களது ஷாலோம் கிளை அலுவலகங்களுக்கு நேரடியாக வந்தும் காணிக்கைகளைக் கொடுத்து ஜெபித்துச் செல்லலாம்.

---

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

---

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

---

AXIS BANK — **A/c. No. : 105010100094373 (IFS Code : UTIB0000105)**

---

ICICI Bank — **A/C. No. 613901112799 (IFS Code : ICIC0006139)**

---

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலமாகவோ அல்லது **Net Transfer** மூலமாகவோ காணிக்கை செலுத்தினால், உடனடியாக அந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள். தொடர்புக்கு : **9698244522**

பிரான்ஸ் நாட்டில் கடந்த மாதம் 3 நாட்கள் தீவிரவாதிகள் பத்திரிகை அலுவலகத்தை மையமாக வைத்து தாக்குதல்கள் நடத்தினர். இந்த தொடர் பயங்கரவாத தாக்குதலில் 17 பேர் உயிரிழந்தனர். இந்த தீவிரவாத சம்பவங்களுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் நடந்த பேரணியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் கலந்து கொண்டனர்.

---

கடந்த டிசம்பர் மாதம் 28ம் தேதி இந்தோனேசியாவிலிருந்து சிங்கப்பூர் சென்று கொண்டிருந்த ஏர் ஏசியா விமானம் கடலில் விழுந்து நொறுங்கியது. இதில் பயணம் செய்த 162 பேரும் உயிரிழந்தனர். இந்நிலையில் இதன் கருப்புப் பெட்டி வெளியிடும் சமிக்ஞைகள் தொடர்ந்து கடலுக்கடியிலிருந்து வந்து கொண்டிருந்தன. விமானத்தின் மையப் பகுதி பல துண்டுகளாக நொறுங்கி கடலின் அடியில் உள்ள துண்டுகளின் இடையே கருப்புப் பெட்டி சிக்கியுள்ளது தெரிய வந்தது.

---

பாகிஸ்தானின் கராய்ச்சி நகருக்கு அருகே எண்ணெய் டேங்கரும் பேருந்தும் மோதி மிகப்பெரிய விபத்து ஏற்பட்டது. இதில் 62 பேர் உயிரிழந்தனர். இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 பேரும் பலியாயினர். எண்ணெய் டேங்கர் ரோட்டின் தவறான பக்கத்தில் அதிக வேகத்துடன் வந்து பேருந்தின் மீது மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது. இதில் இந்த இரண்டு வாகனங்களும் தீ பற்றிக் கொண்டன.

---

நில நடுக்கம், சுனாமி போன்ற இயற்கை பேரழிவுகள் நடப்பதற்கு முன்பே அவற்றைக் குறித்து விலங்குகள் மற்றும் பறவைகளால் உணரமுடியும் என்று அமெரிக்க ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளார்கள். தொலை தூரம் பறந்து செல்லும் பறவைகள் குறித்து ஆய்வு செய்த அமெரிக்க ஆய்வார்கள் இந்த முடிவை அறிவித்துள்ளனர்.


**கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468, 2377737
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 07043334501
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

### ஷாலோம் கிராம ஆலயம்

# உபேராவ்

### மத்தியப்பிரதேசம்



மத்தியப்பிரதேசத்திலுள்ள ஜாபுவா மாவட்டத்தில் உபேராவ் என்ற கிராமம் அமைந்துள்ளது. இந்த கிராமத்திலுள்ள மக்கள் இயேசுவை அறியாமல் விக்கிரக ஆராதனை செய்பவர்களாகவும், மந்திரவாதத்தை நம்புகிறவர்களாகவும், கிறிஸ்தவர்களை விரோதிக்கிறவர்களாகவும் வாழ்ந்து வருகிறார்கள். இந்த கிராமத்தில் ஊழியம் செய்துவரும் சகோ. தும்சிங் புரியா அவர்கள் இயேசுவை அறியாததற்கு முன் சாராயம், பீடி, தம்பாக்கு, என பாவத்தில் வாழ்ந்து வந்தார். இவரது குடும்பத்தில் இவரது தந்தை மற்றும் இவரது அண்ணி, வியாதியினால் பாதிக்கப்பட்டு மிகவும் கஷ்டப்பட்டார்கள். இவர்களின் சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. பின்பு ஊழியர். நூர்ஜி சங்காடா அவர்கள் இயேசுவைப் பற்றிக் கூறி ஜெபித்தபோது, உடனே தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். அதன் மூலம் 2006–ம் வருடம் தும்சிங் பாயின் குடும்பம் முழுவதும் இயேசுவை விசுவாசித்து தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள்.

பின்பு தும்சிங் பாய் ஊழியம் செய்ய தன்னை அர்ப்பணித்து, தனது சொந்த கிராமமாகிய உபேராவ்–ல் தனது வீட்டில் 5 பேருடன் கூட்டம் நடத்த ஆரம்பித்தார். ஆரம்பத்தில் ஊழியர். கிடியா வாக்லா இவருடைய கிராமத்தில் வந்து கூட்டம் நடத்த உதவி செய்தார். பின்பு தும்சிங் பாய் பொறுப்பேற்று கூட்டத்தை நடத்த ஆரம்பித்தார். கூட்டம் ஆரம்பித்த நாட்களில் கிராம மக்கள் மூலம் எதிர்ப்புகள் வந்தது. ஆனாலும் சோர்ந்து போகாமல் உபவாசித்து ஜெபித்தும், தங்களை விரோதிப்பவர்கள் மீது அன்பு காட்டியும் வந்தார். எவ்வளவு விரோதித்தாலும் நம்மீது அன்பு செலுத்துகிறார் என்று விரோதித்தவர்கள் உணர்ந்தார்கள். விரோதங்கள் மாறியது.

ஹீரா பேன் என்ற ஒரு சிறுப்பெண் மரத்திலிருந்து கீழே விழுந்து மரித்து விட்டாள். அவளுக்காக ஊழியர். தும்சிங் புரியா ஜெபித்தபோது தேவன் மரித்த சிறுமிக்கு உயிர் தந்தார். இந்த அற்புதத்தின் மூலம் சபையில் புதிய ஆத்துமாக்கள் வர ஆரம்பித்தார்கள். சபை வளர்ந்து பெருகியது. தற்போது இந்த சபையில் 45 குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டு ஆராதித்து வருகிறார்கள். இந்நிலையில் ஊழியர். தும்சிங் புரியா காணிக்கையாக கொடுத்த தனது சொந்த நிலத்தில் தேவ நாம மகிமைக்காக 18–01–2015 அன்று பேராயர். தேவதாஸ் அவர்கள் தலைமையில் சகோ. ஸ்டாலின் அவர்கள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இந்த ஆலயம் ***Holy Ghost Glorious Fire Revival Ministries,*** (Chennai) ஐக்கியத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவியின் மூலம் கட்டப்பட்டுள்ளது.

**ரூ. 2 இலட்சங்கள் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் இந்த 2015 ஆம் ஆண்டிற்குள் 100 ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!**

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

## BLESS A CHILD - PROJECT



மாணவியின் பெயர் : **நீத்தா கட்டாரா**

தந்தையின் பெயர் : பீம்சந்த் கட்டாரா

தாயாரின் பெயர் : கடி கட்டாரா

பிறந்த நாள் : 16.12.2007

படிக்கும் வகுப்பு : 2nd Std.

சொந்த ஊர் : பண்டாரியா

மாவட்டம் & மாநிலம் : பான்ஸ்வாடா, இராஜஸ்தான்

**மாணவியின் பெற்றோரைப் பற்றிய சில வரிகள்:–** இவளுடைய தந்தை பீம்சந்த் இயேசுவை அறியாத பீல் ஆதிவாசி குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர்கள் குடும்பமாக அசுத்த ஆவிகளையும், விக்கிரகங்களையும் வணங்கி வந்தார்கள். இவளுடைய தந்தை சாராயம் குடிப்பதும். மது அருந்துவதும் தான் வாழ்க்கை என்று வாழ்ந்து வந்தார். அசுத்த ஆவிகளை வணங்கியதால் பிசாசின் கட்டுகளில் சிக்குண்டு திடீரென்று வியாதிப்பட்டார். விடுதலைக்காக எவ்வளவோ மருத்துவம் மற்றும் மந்திரம் பார்த்தும் எவ்வித பலனுமின்றி தவித்த நிலையில் இவருடைய உறவினர் வீட்டில் நடைபெற்ற இயேசுவின் கூட்டத்தில் கலந்துக் கொண்டார். அங்கு ஊழியர் ஜெபித்த போது அற்புத சுகத்தைப் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து சபையில் கலந்துக் கொண்டு ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்த இவருக்கு தன் சொந்த ஜனத்தைக் குறித்த ஆத்தும பாரம் அழுத்தவே ஷாலோம் ஊழியத்தில் இணைந்து தன் சொந்தக் கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறார்.

**மாணவியைக் குறித்து :–** நீத்தா நன்றாக படிப்பாள். நன்றாக ஜெபிப்பாள். இவளுக்கு 1 சகோதரனும் 3 சகோதரிகளும் உண்டு.

**ஜெபியுங்கள் :–** இவளுக்காக, இவளுடைய படிப்பிற்காக, நல்ல சரீர சுகத்திற்காக, பெற்றோர் செய்கிற ஊழியத்திற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

மாணவியைத் தாங்குபவர் :– **Mr. C. Martin Chellaiah, Coimbatore.**

### ஜெபித்துத் தாங்க முன்வாருங்கள்

பிரியமானவர்களே! நீங்களும் ஜெபித்து மாதம் ரூ. 700/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வரலாம். நாம் பராமரித்து வரும் 1056 மாணவர்களில் இன்னும் 252 **மாணவ மாணவியர்களுக்கு ஆதரவாளர்கள் தேவைப்படுகிறார்கள்.**

***Shalom Charity Mission*** என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை D.D. அல்லது Cheque மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக தயவாய் அறிமுகப்படுத்திவையுங்கள்.